# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - MAY 2025
VOL. 23 ISSUE 2 - 28 PAGES - Rs. 21/-

மே 2025



## உள்ளே...

- துக்கத்தின் மூலம் ஆசீர்வாதம்
- பெதஸ்தா
- கேள்வி பதில்
- 10 ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம்
- காருண்யா சேர்க்கை

நான்...
இடங்கொள்ளாமற்போகுமட்டும்
உங்கள்மேல்
**ஆசீர்வாதத்தை**
*வருஷிப்பேன்*
(மல்கியா 3:10)




# துக்கத்தின் மூலம் ஆசீர்வாதம்

மிகவும் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து நம்முடைய பாடுகளையும் துக்கங்களையும் பாவங்களையும் சுமந்தார் என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம் (ஏசாயா 53:4-5). இன்றைக்கும்கூட, வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அவர் உங்களை அன்போடு அழைக்கிறார் (மத்தேயு 11:28). நாம் சுமக்கக் கூடாது என்பதற்காக அவரே எல்லாவற்றையும் தம்மீது ஏற்றுக்கொண்டார். விலையேறப்பெற்ற தம்முடைய இரத்தத்தை சிலுவையில் நமக்காக சிந்திய இயேசுவை நாம் தொழுதுகொள்ளும்போது அவருடைய விடுதலையையும் சமாதானத்தையும் முழுமையான ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுக்கொள்கிறோம்.

## இயேசு தமது சொந்த இரத்தத்தினால் நம்மை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார்

### எதற்காக ஆண்டவர் இந்த பாடுகளை சுமந்தார்?

நம்மை அவருக்கென்று விலைக்கு வாங்கும்படியாக அவர் அவ்வாறு செய்தார். நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், அவர் தங்கும் ஆலயமாகவும் மாறும்படிக்கும், அவருடைய சபையாக அவரோடு இணைந்திருக்கும்படிக்கும் அவர் தமது சொந்த இரத்தத்தை சிந்தினார் (அப்போஸ்தலர் 20:28). இந்த உலகத்தில், யாரும் மற்றவர்களுக்காக தம்முடைய இரத்தத்தை சிந்தவே மாட்டார்கள். தன் ஜீவனுக்கு பதிலாக தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனிதன் கொடுத்துவிடுவான், என்று சாத்தான் தேவனிடத்தில் சவால் விடுவதை, யோபு 2-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். ஆம் மனிதன் எல்லாவற்றையும் கொடுத்துவிடுவான். அவன் தன் ஜீவனை ஒருபோதும் மற்றவர்களிடம் கொடுக்க மாட்டான். ஆனால், ஆண்டவர் அதற்கு நேர்மாறாக செயல்படுகிறதை நாம் பார்க்கிறோம். அவர் தமது இரத்தத்தை எல்லாம் நமக்காக சிந்தியிருக்கிறார் (யோவான் 10:15). என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைதாமே ஒப்புக்கொடுத்தார் என்று பவுல் கலாத்தியர் 2:20-ல் ஆண்டவரை குறித்து கூறுவதைப் பார்க்கிறோம்.

இரத்தத்தில் தான் உயிர் இருக்கிறது. ஆகவே, இரத்தத்தை சிந்தினால்தான் ஒருவர் ஜீவன் பெறமுடியும் என்று வாசிக்கிறோம் (லேவியராகமம் 17:14; உபாகமம் 12:23). எனவேதான் இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுத்தார். எப்படி மனிதர்கள் சரீரத்தோடு இருக்கிறார்களோ, அதேபோல ஒரு சரீரத்தை உருவாக்கிகொண்டு பரிசுத்த இரத்தத்தை சுமந்துகொண்டு வந்து நமக்கு மீட்பை வழங்கினார். மரணத்தை வென்று



Dr. பால் தினகரன் - *paul@jesuscalls.org*

*Pauldhinakaranofficial*

நம்மை விடுவிக்க அவர் மனுஷ சாயலானார் (எபிரெயர் 2:14-15).

இன்றைக்கும் இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டு இருப்பீர்களானால், அவர் தமது இரத்தத்தினால் உங்களை விலைக்கு வாங்கியிருக்கிறார். அன்பின் ஒரு மூத்த சகோதரர் போல, அவர் உங்களை மீட்டெடுத்து தேவனோடு இணைத்து, நீங்கள் வெற்றியுள்ள வாழ்வையும் நிறைவையும் பெறவேண்டும் என்று விரும்புகிறார் (ரோமர் 8:29; எபிரெயர் 2:11).

### இயேசுவின் இரத்தம் இரட்சிப்பையும், மன்னிப்பையும் வழங்குகிறது

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்காக சிந்தப்பட்டதால் நமக்கு கிடைக்கும் வல்லமையான ஆசீர்வாதம். இரட்சிப்பும் பாவமன்னிப்புமே. அவருடைய இரத்தம் பாவ சங்கிலியை உடைத்து நம்மை விடுதலை செய்கிறது.

*ஒருமுறை ஜான் என்ற சகோதரர் இவ்விதமாக தன்னுடைய சாட்சியைப் பகிர்ந்துகொண்டார். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, தன்மீது உடைகளை அணிந்திருக்கிறாரா? இல்லையா? என்ற உணர்வுக்கூட இல்லாமல், காலை முதல் இரவு வரை குடித்துக் கொண்டே இருப்பார். இந்த அடிமைத்தனம் அவருடைய இல்லற வாழ்க்கையைப் பாதித்தது. முற்றிலும் நம்பிக்கையற்ற நிலைமையில் படுத்தப் படுக்கையிலானார். ஆனால், ஒருநாள் ஒருவர் அவரை, வானகரம் ஜெப கோபுரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள ஜெப வீரர்கள் அவருக்கு ஆலோசனைகளை வழங்கி ஜெபித்தனர். அவர்கள் ஜெபிக்கும்போதே இயேசுவின் இரத்தத்தில் இருக்கும் வல்லமை அவருக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தது. தொடர்ந்து ஜெபத்தில் கலந்து கொண்டார். வெகு சீக்கிரத்தில் அவர் தன்னுடைய குடியின் அடிமைத்தனத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை ஆனார். இன்றைக்கு அவருடைய வாழ்க்கை மீட்கப்பட்டு, அதோடுகூட நல்ல நிலையான வேலையோடு, ஆண்டவர் ஒரு தொழிலையும் கொடுத்து அவரை ஆசீர்வதித்திருக்கிறார். இதுதான் இயேசுவின் இரத்தத்தில் இருக்கிற வல்லமை. அது, எல்லா அடிமைத்தனங்களையும் உடைத்து, சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரித்து நம் வாழ்வை கிறிஸ்துவின் மகிமையினால் நிரப்புகிறது (1 யோவான் 1:7).*

**கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களை பேசுகிறது**

### அன்பு தரும் மாற்றங்கள்

ஆண்டவர் ஏன் நம் பாவங்களை மன்னிக்கிறார்? காரணம், அவர் நம்மை நேசிப்பதால் தானே! அன்பு திரளான பாவங்களை மூடும் என்று வேதாகமம் கூறுகிறது (நீதிமொழிகள் 10:12; 1 பேதுரு 4:8). நாம் இரட்சிக்கப்படும்போது மட்டும் ஆண்டவர் நம்மை நேசிப்பவர் அல்ல. அவர் எப்பொழுதும் நம்மை நேசிக்கிறார். நம் பாவங்களை மன்னிக்க அவர் தயை பெறுத்திருக்கிறார். ஆண்டவரே நான் பாவம் செய்துவிட்டேன். இதற்குமேல் என்னால் தாங்க முடியாது என்று நாம் சொல்லும்போது மனதுருகிறார். தம்முடைய இரத்தத்தினால் கழுவுகிறார். அன்பினால் நம் வாழ்க்கையை நிரப்பி, மீண்டும் அவருடைய பிள்ளையாக மாற்றுகிறார்.

*பல வருடங்களுக்கு முன்பு, ஒரு மிகப் பெரிய புத்தகம் எழுதப்பட்டது. பின்னர் அது ஒரு பெரிய நாடகமாக, திரைப்படமாக வெளியிடப்பட்டது. ஒரு திருடன் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடுகிறான். சங்கிலிகளாலே கட்டப்பட்ட நிலைமையில் ஓடுகிறான். அடைக்கலம் தேடி பெரிய மாளிகை ஒன்றுக்குள் அவன் செல்லுகிறான். அங்கே ஒரு கத்தோலிக்க பேராயர் வாழ்ந்து வருகிறார். அவர் அவனை உள்ளே அழைத்து, அவன் காயங்களை கட்டி, குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்து, ஆகாரம் கொடுத்து, அவன் தங்குவதற்கும் அருமையான ஒரு அறையை ஆயத்தம் பண்ணி கொடுக்கிறார். அடுத்த நாள் அதிகாலையில் காவல்துறையினர் வருகிறார்கள். அங்கே அந்த பேராயருடன் இந்த திருடனும் நின்று கொண்டிருக்கிறான். அப்பொழுது காவல்துறையினர், "ஐயா இவனுடைய கையைப் பாருங்கள், இவன் வெள்ளி மெழுகுவர்த்தி ஸ்டான்ட் உங்கள் வீட்டிலிருந்து திருடி வந்திருக்கிறான். அவனை பிடித்துகொண்டு வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். அதற்கு அந்த பேராயர், "அவன் திருடவில்லை, நான் தான் அதை அவனுக்கு கொடுத்தேன்" என்று கூறினார். அவர்களும் அவனை விடுதலை செய்து விட்டு சென்றனர்.*

*அந்த திருடனோ, அந்த பேராயரின் பாதத்தில் விழுந்து, "உங்கள் அன்பினால் என் பாவத்தை கழுவிவிட்டீர்கள். என் இருதயத்தை பரிசுத்தமாய் மாற்றிவிட்டீர்கள்" என்று சொன்னான். அதன்பிறகு அவன் மிகப் பெரிய மேயராக உயர்ந்து, ஜனங்களை பராமரிக்கிறவனாக மாறினான்.*

இதையே நம் இயேசுவும் நமக்கு செய்திருக்கிறார். அவருடைய அன்பினால் நம்முடைய பாவங்களை மறைத்து, நம் இருதயங்களை மாற்றுகிறார். அவருடைய இரத்தம் நம்மை சுத்திகரிப்பதினால், அவருடைய பிள்ளைகளாக நாம் மாற்றப்படுகிறோம். அப்பொழுது எந்த பிசாசும் நம்மை எதிர்த்து நிற்க முடியாது.

### கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு சமாதானத்தை கொண்டுவருகிறது

**"அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோசெயர் 1:20)**

உலகம் அன்பிற்காக ஏங்குகிறது. ஆனால், உண்மையான நிலைத்து நிற்கும் சமாதானம் இயேசு கிறிஸ்துவினிடமிருந்து மட்டுமே வருகிறது. யோவான் 14:27-ல், "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரமாக அல்ல" என்று உறுதியாக கூறுகிறார். இந்த சமாதானம் பரலோகத்துடன்

# இரத்தத்தில் உயிர் இருக்கிறது

நமக்கு ஒப்புரவாக்குதலை உண்டாக்குகிறது. வேதாகமத்தில், லூக்கா 15:7,10 ஆகிய வசனங்களில், நம்முடைய பாவங்கள் இயேசுவின் இரத்ததால் நாம் கழுவப்படும் போது, பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாகிறது! இப்பொழுது ஆண்டவரோடு நேரடியாக தொடர்புகொள்ள முடிகிறது. எப்பொழுதெல்லாம் நாம் அவரை நோக்கி அழைக்கிறோமோ, அப்பொழுதெல்லாம் அவர் நமக்கு செவிக்கொடுக்கிறவராய் இருக்கிறார்.

இந்த உலகம் சமாதானத்திற்காக ஏங்குகிறது. இந்த சமாதானம் நாம் மற்றவர்களுடன் ஒருமனப்பட்டு வாழ்வதற்கும் உதவி செய்கிறது. நாம் கர்த்தருடைய பந்தியில் சேரும்போது அவருடைய இரத்தம் நமக்கு சம்பாதித்து கொடுத்த சமாதானத்தை நினைவு கூருகிறாம் (1 கொரிந்தியர் 11:24,25). நாம் அவருடைய இரத்தத்தை கனப்படுத்தும்போது, அவர் நம்முடைய இருதயத்தை அன்பினாலும், ஒருவருக்கொருவர் சமாதானமாய் இருக்கும்படியும் செய்கிறார்.

### இயேசுவின் இரத்தம் நம்மீது ஆசீர்வாதங்களை கூறுகிறது

உலகம் முழுவதும் சாபத்தினால் நிறைந்திருக்கிறது. ஆனால் இயேசுவின் இரத்தமே அந்த சாபத்தை மாற்றுகிறது (எபிரெயர் 12:24).

பாலாக் இஸ்ரவேலரை சபிக்கும்படி முற்படுகிறான். ஆனால், அவன் இந்த ஜனங்கள் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்னால் அவர்களை சபிக்க முடியாது என்று கூறுகிறான் (உபாகமம் 23:5). இதே காரியம் உங்களுக்குமுரியது, பிசாசு உங்களை சோதிக்க முற்படுவான். ஜனங்கள் உங்களுக்கு விரோதமாக பேசலாம். ஆனால், நீங்கள் இயேசுவின் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கும்வரை, நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவருடைய இரத்தம் உங்களுக்கு ஆசீர்வாதங்களை கொண்டுவரும். உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்கள் வருகிறது.

### இயேசுவின் இரத்தத்தினால் முத்திரை போடப்பட்ட உடன்படிக்கை

என் அன்பரே, இயேசு நம்மோடுகூட இரத்தத்தினால் உடன்படிக்கை செய்திருக்கிறார். தேவகுமாரனாக அவர் இந்த உலகத்திற்கு வந்தார். தம்மையே தியாகபலியாக அர்ப்பணித்தார். அவருடைய இரத்தத்தினால் நமது இரட்சிப்பை முத்திரை செய்தார். அவருடைய இரத்தத்தினிமித்தம் நாம் மீட்கப்பட்டு, கழுவப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு, அவருடைய சமாதானத்தினால் நிரப்பப்பட்டு, அவருடைய ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளிகளாக மாறினோம்.

உங்கள் வாழ்வில் இயேசுவின் இனிய பிரசன்னத்தை அனுபவித்தவர்களாக அவருடைய வல்லமை நிறைந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தொடர்ந்து பெலப்படுவீர்களாக.

**ஆசீர்வதிக்கப்பட்ட மாதம்!**




## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

*BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org*

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

SCAN TO PAY

Paytm G Pay BHIM

UPI ID **jesuscalls@indus**

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே **98409 99923** என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

# உலகளாவிய சந்தைகள் வீழ்ச்சி ⚠️



## Dr. பால் தினகரன் உரைத்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் தொடங்கிவிட்டது

டாக்டர் பால் தினகரன் அவர்களுக்கு ஆண்டவர் அருளிய 2025-ம் ஆண்டிற்கான தீர்க்கதரிசன வெளிப்பாடுகள், பிப்ரவரி 2025 இயேசு அழைக்கிறார் பத்திரிகையில் பக்கம் 4 & 5-ல் பிரசுரிக்கப்பட்டும், சமூக ஊடக தளங்களில் பதிவேற்றப்பட்டும் உள்ளது.

### Dr. பால் தினகரன் உரைத்த தீர்க்கதரிசனங்களில் ஒன்று:

2025-ம் ஆண்டில், பொருளாதார சந்தைகள் ஸ்திரமாக இருக்காது. உலக நாடுகளை ஒன்றுபடுத்த தலைமைத்துவம் இல்லாமல் தேசங்கள் பெருங்குழப்பங்களை கடந்துசெல்லும். ஒவ்வொரு தேசமும் தனக்கானவற்றை தானே பார்த்துக்கொள்ளும் நிலை வரும். எந்த தேசத்தை அல்லது எந்த கூட்டமைப்பை பின்பற்றுவது என்று தெரியாத நிலையில் தேசங்கள் காணப்படும். என்னுடைய நாமத்தை சொல்லி கூப்பிடுகிற யாவரும் நிச்சயமாகவே என்னுடைய ஆவிக்குரிய ஆசீர்வாத மழையை அனுபவிப்பார்கள். 2025-ம் ஆண்டு, "ஆசீர்வாதமான மழையின் ஆண்டு" என்று கர்த்தர் கூறுகிறார்.

### தீர்க்கதரிசன நிறைவேறுதல்:

பங்குகள் முழுவதும் சரிந்துவிட்டன. மும்பை முதல் டோக்கியோ வரை சந்தைகளில் பீதி பரவியுள்ளது. இந்தியாவில், சென்செக்ஸ் ஒரே நாளில் 2,200 புள்ளிகளுக்கு மேல் சரிந்தது. இந்தியாவில் முதலீட்டாளர்கள் 13,00,000 கோடி ரூபாய்க்கு மேல் இழந்துள்ளனர். அதாவது சுமார் ஒரு $50 பில்லியன். இந்தப் பணம் மும்பை பங்குச் சந்தையில் இருந்து மட்டும் மறைந்துவிட்டது. இது நம்முடைய சர்க்யூட் பிரேக்கரை நாம் அழைக்க விரும்புவதை போன்றது; அங்கு வெவ்வேறு குறியீடுகளில் வர்த்தகம் உண்மையில் நிறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க பங்குகள் சாதனை அளவில் $11 டிரில்லியன் மதிப்பை இழந்துள்ளன. ஆசியா முழுவதும் இதே கதைதான். டோக்கியோவின் நிக்கல் 8%க்கும் அதிகமாக சரிந்தது. ஜப்பான் மற்றும் தைவானில் சந்தைகள் கீழ்மட்டத்தை எட்டின. ஹாங்காங்கிலும் இதே அளவில் மோசமாக இருந்தன. 1997-க்கு பிறகு, அதன் மிகப்பெரிய சரிவை சந்தித்தது. மேலும், பதட்டமான விற்பனை தொடர்ந்து ஏற்படுவதை நிறுத்த, வர்த்தகம் தற்சமயம் நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது.

சமீப நாட்களில் உலக சந்தைகளில் நாம் கண்ட எதிர்வினையால் இந்த தாக்கங்கள் பிரதிபலிக்கின்றன. உலக நிதி அமைப்புகள் அசைகின்றது. உலகப் பொருளாதாரம் உண்மையில் பெரும் அழுத்தத்தில் உள்ளது. அடுத்து என்ன நடக்கும் என்பதற்கு உலகம் இப்போது தயாராக உள்ளது.

ஆம், நிச்சயமில்லாத மற்றும் சவால் நிறைந்த இந்த காலங்களில் நம்மை வழிநடத்த, ஆண்டவரின் இரக்கம், ஞானம் மற்றும் ஆறுதலை தேடி, எப்போதும் இல்லாத அளவுக்கு ஜெபத்தில் ஒன்றாக வருவோம்.

தீர்க்கதரிசனத்தை காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



# குடும்பத்தில் சமாதானத்தை நாடுதல்

இன்றைய உலகில் காணப்படும் தவறான புரிந்து கொள்ளுதல்கள், கருத்து வேறுபாடுகள் மற்றும் மன அழுத்தங்கள் போன்றவை, குடும்ப உறவுகளை அதிகமாக பாதிக்கும்போது, வீட்டிற்குள் சமாதானத்தைக் காண்பது என்பது, பலர் எதிர்கொள்ளும் ஒரு சவாலாகவே உள்ளது. இருப்பினும், விசுவாசிகளாக, சூழ்நிலைகளை சார்ந்துகொள்ளாமல், கிறிஸ்துவில் வேரூன்றிய சமாதானத்தைத் தேடுவதற்கு நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் சமாதானம், உலகம் கொடுக்கும் சமாதானத்தை போன்றதல்ல. அது எல்லா புத்திக்கும் மேலானது. கலங்கிய இதயங்களை அமைதிப்படுத்துகிறது; குடும்பங்களை அன்பிலும் நட்பிலும் இணைக்கிறது.

இயேசு தாமே கூறினார், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்; என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக" (யோவான் 14:27). உண்மையான சமாதானம், வெளிப்புற நிலைமைகளிலிருந்து அல்ல, கிறிஸ்துவிடமிருந்தே வருகிறது. நாம் அவருடைய சமாதானத்தைத் தேடும்போது, அது நம் வீட்டை, அன்பு பொறுமை மன்னிப்பு நிறைந்த இடமாக மாற்றுகிறது.

### கிறிஸ்துவின் சமாதானத்தை அறிந்துகொள்ளுதல்

கிறிஸ்து அருளும் சமாதானம், முரண்பாடுகள் காணப்படாத நிலைமைக்கும் அப்பாற்பட்டது. இது ஆண்டவரின் பிரசன்னத்தில் உருவாகும் ஆழமான, பாதுகாப்பான உணர்வாகும். இந்த சமாதானமானது, விசுவாசம், நம்பிக்கை மற்றும் ஆண்டவரின் சித்தத்திற்கு அர்ப்பணித்தல் ஆகியவற்றில் உறுதியாக நாட்டப்பட்டுள்ளது.



சோதனைகளிலும் உபத்திரவங்களிலும் இயேசுவை தாங்கியதும் அந்த சமாதானமே. இந்த சமாதானத்தை பற்றிக் கொள்கையில், நம் குடும்பங்களில் ஏற்படும் சச்சரவுகளை, ஞானத்தினாலும் கிருபையினாலும், அன்பினாலும் மேற்கொள்ள நாம் கற்றுக்கொள்வோம்.

கிறிஸ்துவின் சமாதானம் நம் இருதயங்களில் ஆளுகை செய்வதன் முக்கியத்துவத்தை அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்தினார் (கொலோசெயர் 3:15). கிறிஸ்துவின் சமாதானம் நம் இருதயங்களில் ஆளுகை செய்யும்போது, அது நம்முடைய வார்த்தைகளிலும், செயல்களிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, நம் குடும்ப அங்கத்தினர்களுடன் நாம் தொடர்புகொள்ளும் விதத்தை வடிவமைக்கிறது.

### குடும்பத்தில் சமாதானத்தை கடைபிடிக்க வேதாகம எடுத்துக்காட்டுகள்

**1. ஆபிரகாமும் லோத்தும்:** சண்டைக்கு பதில் சமாதானத்தை தேர்ந்தெடுத்தல்

ஆபிரகாம் மற்றும் லோத்தின் ஆஸ்திகள் மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற் போயிற்று. எனவே, அவர்களுடைய மேய்ப்பர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பிரச்சனை அதிகரிக்க இடம் கொடுக்காமல், அதற்குப் பதிலாக, ஞானத்தாலும் மனத்தாழ்மையாலும் வழிநடத்தப்பட்ட ஆபிரகாம், ஒரு அமைதியான தீர்வை எடுத்துரைக்கிறார். "எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்" (ஆதியாகமம் 13:8) என்று கூறுகிறான். ஆபிரகாம், தன்னுடைய சொந்த ஆதாயத்தை காட்டிலும், சமாதானத்தை முக்கியப்படுத்தி, முதல் வாய்ப்பை லோத்துக்கு விட்டுக்கொடுக்கிறதை பார்க்கிறோம்.

குடும்பத்தில் சமாதானத்தைத் தேடுவது என்பது சில நேரங்களில் நம் சொந்த விருப்பங்களை விட்டுவிட்டு, மனத்தாழ்மையை தேர்ந்தெடுப்பதாகும் என்பதை

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

ஆபிரகாமின் பதில் நமக்கு கற்பிக்கிறது. ஆபிரகாம், தனது உரிமைகளை வலியுறுத்துவதற்கு பதிலாக, தன்னலமின்றி செயல்பட்டார். நாம் சமாதானத்தை முக்கியப்படுத்தும்போது, கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கிறோம். நமது தேவைகள் சந்திக்கப்பட ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறோம்.

**2. யோசேப்பும் அவனுடைய சகோதரர்களும்:**
மன்னிப்பையும் சமாதானத்தையும் மீட்டெடுத்தல்

தேவ சமாதானத்தினால் ஏற்படும் குடும்ப ஒப்புரவாகுதலுக்கு, யோசேப்பு மற்றும் அவருடைய சகோதரர்களின் சரித்திரம் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது (ஆதியாகமம், அதிகாரங்கள் 37-50). யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்டார்; பல வருடங்களாக வேதனைகளை அனுபவித்தார். எனினும் யோசேப்பு, எகிப்தில் அதிகார நிலைக்கு உயர்ந்திருக்கையில், அவனுடைய சகோதரர்கள் உணவு தேடி வந்தபோது, அவர்களை பழிவாங்குவதற்கு பதிலாக மன்னிப்பை தேர்ந்தெடுத்தார். அவர், அவர்களை ஆறுதல்படுத்தி, "நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதியாகமம் 50:20) என்று கூறினார்.

யோசேப்பின் மன்னிப்பின் திறமையும், குடும்பத்தில் சமாதானத்தை மீட்டுக் கொடுத்ததற்கும், தேவ திட்டத்தின்மீது அவன் வைத்திருந்த நம்பிக்கையே காரணமாக விளங்கியது. கிறிஸ்துவின் சமாதானம் நம்மை வழிநடத்த அனுமதிக்கும் போது, யோசேப்பை போலவே, நாம் கசப்பை கைவிட்டு, ஒப்புரவாகுதலை ஏற்றுக்கொள்வோம்.

## குடும்பத்தில் கிறிஸ்துவின் சமாதானத்தை கடைபிடிக்க நடைமுறை வழிகள்

**1. ஜெபத்திற்கும், தேவனுடைய வார்த்தைக்கும் முக்கியத்துவம்**

ஒரு சமாதானமான குடும்ப சூழ்நிலை, ஆண்டவரை ஒன்றாக தேடுவதில் துவங்குகிறது. வழக்கமான குடும்ப ஜெபங்களும், வேத வாசிப்பும் ஒற்றுமையின் உணர்வை வளர்த்து, ஆண்டவரின் ஞானத்தில் சார்ந்திருக்க நினைவூட்டுகின்றன. நாம் ஜெபிக்கும்போது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நம் இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும் என்பதை நமக்கு உறுதியளிக்கிறது.

**2. மன்னிப்பையும் கிருபையையும் கடைப்பிடித்தல்**

கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்ததுபோல, நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்க அழைக்கப்பட்டுள்ளோம் (எபேசியர் 4:32). வெறுப்புகளை பற்றிக்கொள்வது, பிரிவினைக்கு மட்டுமே வழிவகுக்கும். பூசல்கள் ஏற்படும் போது, நாம் கேட்பதற்கு தீவிரமாகவும், பேசுவதற்கு பொறுமையாகவும், கோபிப்பதற்கு தாமதமாகவும் இருக்கவேண்டும் (யாக்கோபு 1:19).

**3. அன்புடனும் பொறுமையுடனும் தொடர்புகொள்ளுதல்:** தவறான புரிந்துகொள்ளுதலினால், பல குடும்பங்களில் பிரச்சினைகள் எழுகின்றன. இடித்து போடும் வார்த்தைகள் அல்ல, கட்டியெழுப்பும் வார்த்தைகளை பயன்படுத்துமாறு எபேசியர் 4:29 நமக்கு அறிவுறுத்துகிறது. மென்மையுடனும் பொறுமையுடனும் பேசும்போது, சமாதான செழிப்புக்கு ஏதுவான சூழ்நிலை உருவாகும்.

**4. தன்னலமின்றி ஒருவருக்கொருவர் சேவை செய்யுங்கள்**

உண்மையான தலைமைத்துவம், ஊழியம் செய்வதில் காணப்படுகிறது என்பதை இயேசு விளக்கி காண்பித்தார் (மாற்கு 10:45). குடும்ப உறுப்பினர்கள், தனிப்பட்ட ஆதாயத்தைத் தேடுவதைவிட ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கும்போது அங்கே சமாதானம் விருத்தியாகும்.

*சாராள் என்ற ஒரு தாய் தன்னுடைய குடும்ப சமாதானத்துக்காக மிகவும் ஏங்கினார்கள். அவர்களுடைய பிள்ளைகள் அதிகமாய் சண்டை போட்டுக்கொண்டிருந்தபடியால், குடும்பத்தில் மேலும் பதட்டமான சூழ்நிலைகளே காணப்பட்டது. விரக்தியடைந்த அந்த தாய், பிள்ளைகளின் இருதயத்தை சமாதானத்தினால் நிரப்பும்படி ஆண்டவரிடம் முறையிட்டார்கள். ஒரு நாள், பிள்ளைகளுக்குள் ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட விவாதம் தீவிரமடைந்தபோது, சாராள் தனது குரலை உயர்த்துவதற்கு பதிலாக, "ஜெபிப்போம்" என்று மென்மையாக கூறினார்கள். ஆச்சரியப்பட்ட அவளுடைய பிள்ளைகள் முதலில் தயங்கினர். பின்பு அவர்களுடன் சேர்ந்து ஜெபித்தனர். அப்படியாக அவர்கள் ஜெபிக்கும்போது, சமாதானம் அவர்கள்மீது இறங்கியது.*

*காலப்போக்கில், சாராள், கிறிஸ்துவின் சமாதானம் தங்கள் வீட்டிற்குள் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி ஆண்டவரை நோக்கி ஜெபத்திலும் பொறுமையுடனும் காத்திருந்தபடியால், குடும்பத்தின் செயல்பாட்டையே அது மாற்றியது. அவர்களுடைய குடும்பம் மறுரூபமாயிற்று.*

ஆம், குடும்பத்தில் சமாதானத்தைக் கடைபிடிப்பது என்பது எளிதானதல்ல. கிறிஸ்துவின் சமாதானத்தை நாடி தேடும்பொழுது, அன்பினாலும் ஞானத்தினாலும் போராட்டங்களை மேற்கொள்ள பலன் கிடைக்கும். எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம் இருதயங்களையும், நம் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ள நாம் அனுமதிக்கும்போது, நம் வாழ்வில் ஒவ்வொரு உறவு முறையிலும் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஏசாயா 26:3 தரும் வாக்குத்தத்தத்தை பற்றிக்கொள்வோம்: "உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்". நாம் நம் இருதயங்களை கிறிஸ்துவின்மீது வைக்கும்போது, அவருடைய சமாதானம் நம் குடும்பங்களை காத்து, ஒற்றுமை, அன்பு மற்றும் மகிழ்ச்சியை நம் வீடுகளுக்குள் கொண்டுவரும்.

ஜெபத்தை முக்கியப்படுத்தி, மன்னிப்பை நடைமுறைப்படுத்தி, அன்புடன் தொடர்புகொண்டு, ஒருவருக்கொருவர் தன்னலமின்றி சேவை செய்வதன் மூலம், தேவ சமாதானம் ஆளுகை செய்யும் ஒரு குடும்பத்தை நாம் உருவாக்குகிறோம். நாம் எப்போதும் கிறிஸ்துவின் சமாதானத்தை தேடுவோமாக. ஏனென்றால், அவரில் மட்டுமே நம் குடும்பங்கள் உண்மையான மற்றும் நீடித்த ஒருமைப்பாட்டில் நிலைத்திருக்க முடியும்.





# இயேசு அழைக்கிறார்
# குடும்ப ஆசீர்வாத திட்டம்

"நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்." (யோசுவா 24:15)

## ஒன்றாக சேவை செய்யும் குடும்பம், ஒன்றாக ஸ்திரப்பட்டு நிற்கும்

### 10 ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம்

திருமணமாகி பத்து ஆண்டுகள் ஆகியும் குழந்தையற்ற நிலைமை என்னை வாதித்தது. மருத்துவ உதவி இருந்தும், இரண்டு முறை கருச்சிதைவு ஏற்பட்டது. இந்நிலையில், திருச்சி ஜெப கோபுரத்திற்கு சென்றேன். அங்கிருந்த ஜெப வீரர், மிகுந்த மனதுருக்கத்துடன் எனக்காக ஜெபித்தார். அவர் என்மீது கைகளை வைத்தபோது, "இந்த ஆண்டு நீங்கள் கருத்தரிப்பீர்கள்!" என்று தெய்வீக நம்பிக்கையோடு தீர்க்கதரிசனம் உரைத்தார். அந்த தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு, உடனடியாக குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் சேர்ந்தேன். ஆச்சரியப்படும் விதமாக, அந்த ஆண்டிலேயே, நான் கருத்தரித்தேன்! ஒரு ஆண் குழந்தைக்கு தாயாகும் பாக்கியம் பெற்றேன். குடும்ப ஆசீர்வாத திட்ட பங்காளர்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு தேவன் எவ்வளவு உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதற்கு நான் ஜீவனுள்ள சாட்சி. - எஸ். சாந்தி, திருச்சி.

**சகோதரி சாந்தியை போலவே, இந்த தெய்வீக திட்டத்தில் சேருவதன் மூலம் நீங்கள் கர்த்தருக்கு சேவை செய்ய தீர்மானிப்பதால், நீங்களும் உங்கள் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்ட ஆசீர்வாதங்களை பெறுவீர்கள்.**

இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டம், தேவனுடைய பிரசன்னத்தையும், கூடிவாழ்வதையும், செழிப்பையும் குடும்பத்திற்குள் கொண்டுவரும் ஒரு தெய்வீக உடன்படிக்கையாகும். கொர்நேலியு போன்று, அவனுடைய விசுவாசமும், உதாரத்துவமும் குடும்பத்திற்கு இரட்சிப்பை கொண்டுவந்ததோ, அப்படியே தேவனை சேவிக்கும் குடும்பங்கள் அவருடைய உயர்ந்த ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள். உங்கள் குடும்பத்தை தேவனுடைய சேவைக்கு அர்ப்பணிக்கும்போது, அவருடைய பாதுகாப்பு, சமாதானம் மற்றும் செழிப்பு ஆகியவற்றை பெறுவது உறுதி.

### குடும்ப ஆசீர்வாத திட்டத்தின் சிலாக்கியங்கள்:

- நீங்கள் அனுப்பும் பொருத்தனை காணிக்கை ரூ.5,000/- தொகையை எட்டியதும் உங்கள் குடும்பத்திற்கான வாக்குத்தத்த வசனம் அடங்கிய பிரத்தியேக அழகிய சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும்.
- ஆண்டுதோறும் திருமணநாளின்போது ஜெப வீரர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜெபிப்பார்கள்.

மாதந்தோறும் ☐ ரூ.300/- ☐ ரூ.500/- ☐ ரூ.1,000/- அனுப்பி நீங்கள் இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணைந்திடலாம்.

மேலும் விவரங்களுக்கு: www.jesuscalls.org

பங்காளர் சேவை எண்: 044-23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை)

குடும்ப ஆசீர்வாதத் திட்டத்திற்கு காணிக்கை அனுப்பும் எளிய வழிகளை இந்த இதழின் 4-ம் பக்கத்தில் காணலாம்.



Karunya
ACADEMY FOR THEOLOGICAL EDUCATION
(Registered Candidate Member ATA)
ADMISSIONS 2025 OPEN
Enrol
Experience
Execute
PROGRAMMES OFFERED:
• Bachelor of Theology (B.Th) (3 Yrs)
• Master of Divinity (M.Div) (2 Yrs / 3 Yrs)
• P.G. Diploma in Clinical Biblical Counselling (1 Yr)
• Diploma in Biblical Life and Ministry (1 Yr)
• Diploma in Women Ministry and Leadership (1 Yr)
• Diploma in Prayer and Spiritual Gifts (1 Yr)
Motto: Mission with Compassion
Vision: To prepare leaders to serve like Jesus
MODE OF STUDY
Online : Learning Management System
Distance : Weekly online sessions with study materials
Residential : Well furnished Rooms, Wi-Fi connectivity, Play area for all sports, Homely food
Karunya: A place for Sound Biblical and Theological Learning
MEDIUM OF INSTRUCTION
► English ► Tamil ► Telugu ► Hindi
50% scholarship for the deserving students
Scan QR Code to Start the Admission Process
Karunya Nagar, Coimbatore - 641 114, Tamil Nadu, India.
admissions@kate.education
www.kate.education
Contact: 94878 46630




Karunya
CHRISTIAN SCHOOL
ARISE AND SHINE
Affiliated to CBSE (1930600)
Founder: Dr. Paul Dhinakaran
Karunya Christian School
NURTURING THE FUTURE
For Classes
PRE-KG to XII
Streams Offered in CLASS-XI
Science and Commerce
FOR DAY-SCHOLARS AND HOSTELLERS
• உயர்ந்த மதிப்பெண்கள்!
• ஒழுக்கமும் ஆற்றலும் உயரும்!!
• உயர்ந்த கண்ணோட்டம்!!!
Contact: 0422-2614830/31, 94421 06409
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114.
kcs@karunya.edu • www.kcs.edu.in

## கேள்வி பதில்

### சகோ. சாமுவேல் தினகரன் பதிலளிக்கிறார்...

# தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது பாவமா?

– பீட்டர் தேவநேசன்




அன்பான நண்பரே, தொடர்ச்சியாக ஊடக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது இன்றைய உலகில் நடைமுறையாகி விட்டது. ஒரு நிகழ்ச்சியின் சில பகுதிகளைப் பார்ப்பதோடு நிறுத்தாமல், இடைவெளியின்றி தொடர்களைத் தொடர்ந்து பார்க்கிறார்கள். ஊடகங்களால் அற்புதமாக வடிவமைக்கப்பட்ட இந்தக் கருத்து, இளைஞர்களை கவர்ந்து இழுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

2 அல்லது 3 மணி நேர திரைப்படத்தைப் போலல்லாமல், இந்தத் தொடர்கள் தொடர்ந்து பார்க்கக்கூடிய பல பகுதிகளாக வருகின்றன. அது, உங்களுக்குப் பிடித்த பாப்கார்ன் அல்லது குலாப் ஜாமூன் போன்ற இனிப்பு வகை சிற்றுண்டியை, எவ்வளவு உள்ளே போகிறது என்பதைக்கூட உணராமல் தொடர்ந்து சாப்பிடுவது போலாகிவிடுகிறது. "யாராலும் ஒன்றோடு நிறுத்த முடியாது" என்னும் லேய்ஸ் சிப்ஸ்-ன் (Lay's Chips) பிரபலமான வாசகத்தைக் கேட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். சுவை அதிக ஆவலைத் தூண்டுகிறது, அதனால் நீங்கள் உணரும் முன்பே, ஒரு முழு பாக்கெட்டையும் முடித்துவிடுகிறீர்கள். இதேபோல், தொடர்களைத் தொடர்ந்து பார்க்கும்போது, ஒவ்வொரு பகுதியாக போய்க்கொண்டேயிருக்கிறது. நம்மால் நிறுத்தவே முடிவதில்லை.

### ஊடக யுக்தியின் கண்ணி

பார்வையாளரின் கவனத்தை எவ்வாறு ஈர்ப்பது, அதை எப்படி தக்கவைத்துக் கொள்வது என்பதை ஊடகத் தயாரிப்பாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். பார்வையாளர்களை இன்னும் அதிகமாக ஏங்கச் செய்ய, கதைக்களங்கள், சதித் திருப்பங்கள் மற்றும் மலைச் சரிவுக் காட்சி போன்றவற்றை கவனமாக வடிவமைக்கிறார்கள். ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு மர்மத்துடன் முடிகிறது. கடுமையான அல்லது எதிர்பாராத ஒன்று நடக்கிறது. அது அமைதியாக தோன்றும் ஒரு குடும்ப நிகழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் திடீரென்று, இறுதியில் யாரோ ஒருவர் விபத்தை சந்திக்கிறார். "அவர் உயிருடன் இருக்கிறாளா? விபத்து கடுமையானதா? அடுத்து என்ன நடக்கும்?" என்று யோசித்துக்கொண்டிருக்கும்போதே, திரையில், "அடுத்த பகுதியில் சந்திப்போம்!" என்ற வாசகம் பளிச்சிடுகிறது.

இது ஒரு அற்புதமான வர்த்தக யுக்தி. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பலர் கொக்கியில் சிக்கிய மீனைப் போல, இந்தத் தூண்டிலுக்கு இரையாகிறோம். உணரும் முன்பே, சில நாட்களுக்குள் பல சீசன்களைப் பார்த்துவிடுகிறோம். ஒரு நண்பர், "நான்கு நாட்களில் ஆறு சீசன்களைப் பார்த்து முடித்தேன்" என்று என்னிடம் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. திரையோடு ஒட்டிக்கொண்டிருக்கும் நேரத்தை கற்பனை செய்து பாருங்கள்!

### முடிவில்லாமல் பார்க்கும் சுழற்சி

ஒரு நிகழ்ச்சியுடன் நிறுத்தாமல், ஒரு தொடரை முடித்ததும், உடனடியாக அடுத்ததைத் தேடுகிறோம்.

நம்மில் பலர் நெட்ஃபிளிக்ஸ், அமேசான் பிரைம், ஹாட்ஸ்டார் மற்றும் ஜீ5 போன்ற தளங்களில் கிடைக்கும் எல்லா தொடர்களையும் பார்த்துத் தீர்த்துவிட்டு, "புதிதாகப் பார்க்க எதுவும் இல்லை" என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். சற்றும் உணராமலேயே, நம் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பாதிக்கத் தொடங்கும் அளவிற்கு அதிக ஊடக நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம்.

தூங்கும்போதுகூட, நிகழ்ச்சிகளைப் பற்றி கனவு காண்கிறோம். வகுப்பிலோ அல்லது வேலையிலோ இருக்கும்போது, நம் மனம் கதைக்களங்களுக்கு செல்கிறது. நண்பர்களுடன் இருக்கும்போது, பார்த்த அந்த நிகழ்ச்சிகளைப் பற்றியே பேசுகிறோம். படிப்படியாக, நம் முழு வாழ்க்கை முறையையும் இந்தக் கற்பனை உலகம் ஆட்கொண்டு விடுகிறது.

### வேதாகமம் சொல்வதென்ன?

இந்தக் கண்ணியைப் பற்றி வேதாகமம், எபேசியர் 5:11-ல் இவ்வாறு நம்மை எச்சரிக்கிறது.

"**கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.**"

பயனற்ற செயல்களைத் தொடரும்போது, பயனுள்ள வாழ்க்கை வாழ்வது கடினம்

இந்த நிகழ்ச்சிகள் தற்காலிக இன்பத்தையும், பரவசத்தையும் கொடுக்கக்கூடும். அதேசமயம் அவை "கனியற்ற அந்தகார செயல்களை" உருவாக்குகின்றன. அவை நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உண்மையான மதிப்பை சேர்ப்பதில்லை. அவை நம்மை உருவாக்குவதற்குப் பதிலாக, நம் மனநிலையை மாற்றி, தேவனுடனான நம் உறவை பலவீனப்படுத்தும் மாயைக்குள் நம்மை இழுத்து விடக்கூடும்.

### தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் நுட்பமான ஆபத்து

ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பது தீங்கற்றதாகத் தோன்றினாலும், நீண்ட நேரம் அதிலேயே மூழ்கி இருப்பது நம் எண்ணங்களையும் செயல்களையும் நுட்பமாக பாதிக்கிறது. கொலோசெயர் 3:2 ஒரு காரியத்தை நமக்கு நினைவூட்டுகிறது:

"**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**"

நம் மனம் தொடர்ந்து உலகக் காரியங்களால் ஆக்கிரமிக்கப்படும்போது, தேவனுடைய காரியங்களில் கவனம் செலுத்துவது கடினமாகிவிடும். இந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு படிப்படியாக நம் மனப்பான்மைகள், விருப்பங்கள் மற்றும் யதார்த்தத்தைப் பற்றிய நம் உணர்வை உருவாக்குகின்றன என்பது ஆபத்தாகிவிடுகிறது. ரோமர் 12:2 இதை வலியுறுத்துவதைக் கவனியுங்கள்:

"**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**"

தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது உலகத்தின் வேஷத்திற்கு இணங்கும்படி நம்மை உருவாக்குகிறது. மற்றும் தேவ பிரசன்னம் நம் மனதைப் புதுப்பிக்கப் போதுமான அளவு இடமளிப்பதில்லை.

### சத்தியத்தை வெளிப்படுத்துதல்

நம்மை விழுங்க முயற்சிக்கும் இருளை அம்பலப்படுத்துமாறு வேதாகமம் அறிவுறுத்துகிறது. ஊடக நிகழ்ச்சிகளைப் பார்க்க நாம் எவ்வளவு நேரம் செலவிடுகிறோம், அது நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகிறதா அல்லது தடுக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கான நேரம் இது. பிலிப்பியர் 4:8 நமக்கு ஒரு நல்ல வழிகாட்டுதலை வழங்குகிறது:

"**கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.**"

நாம் பார்க்கும் நிகழ்ச்சிகள் இந்தக் கொள்கைகளுடன் ஒத்துப்போகவில்லையென்றால், நம்மை நாமே இப்படிக் கேட்டுக்கொள்ள வேண்டும்: "இது, நான் தேவனிடம் நெருங்கி வர உதவுகிறதா, அல்லது என் கவனத்தை சிதறடிக்கிறதா?"

தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது பாவமா என்னும் உங்கள் கேள்வியைப் பொறுத்தவரை, தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது என்பது வெறும் பொழுது போக்கைவிட அதிகமான ஒன்று. அதுவே புகைபிடித்தல், மதுபானம் அல்லது போதைப் பொருள் பயன்படுத்துதல் போன்ற ஒரு அடிமைத்தனமாக எளிதில் மாறக்கூடும். உங்களால் பின்னர் அதை விடமுடியாது என்பதே இதன் அடிப்படை ஆபத்து. அது உங்களைக் கவர்ந்திழுப்பதால், அதிலிருந்து விடுபடுவது கடினமாகி விடுகிறது. சாதாரணமாக தொடங்கும் அது, விரைவில் உங்கள் நேரத்தையும் கவனத்தையும் உட்கொள்கிற, கட்டுப்படுத்த முடியாத ஆசையாக மாறிவிடும்.

### ஒன்றினால் கட்டுப்படுத்தப்படுவதைப் பற்றிய வேதாகமத்தின் எச்சரிக்கை

நம் மனமும் இருதயமும் இந்த நிகழ்ச்சிகளில் எவ்வளவு ஆழமாக சிக்கிக்கொள்கின்றன என்பதில் தான் உண்மையான ஆபத்து உள்ளது. உங்களை நீங்களே இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்:

உங்களால் ஒருநாள் அதைப் பார்க்காமல் இருக்க முடியுமா? ஒரு பகுதியை மட்டும் பார்த்துவிட்டு நிறுத்த முடியுமா? அல்லது தொடர்ந்து பார்க்க வேண்டும் என்ற உந்துதல் இருக்கிறதா? 1 கொரிந்தியர் 6:12 நமக்கு ஒரு காரியத்தை நினைவூட்டுகிறது:

"**எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.**"

ஏதோ ஒன்று நம்மை ஆட்கொண்டு, நம் எண்ணங்களையும் பழக்கங்களையும் கட்டுப்படுத்துமானால், அது ஒரு வகையான அடிமைத்தனமாக மாறிவிடும்.

தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது பெரும்பாலும் நம் சுயக்கட்டுப்பாட்டை இழக்கச் செய்கிறது.

### அவ்வழக்கம் உண்டாக்கும் சோம்பல்

அதிகப்படியாகத் தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மற்றொரு ஆபத்தான விளைவுதான், சோம்பல். பொழுது போக்கு என்பது மனதை நிதானப்படுத்தி ஓய்வெடுப்பதாயிருக்க, அதிலேயே மூழ்கி விடும்போது, அது ஒரு மந்தமான, செயலற்ற மனநிலையை உருவாக்குகிறது. காலப்போக்கில், இந்த சோம்பல் நம் உடல் முழுவதும் பரவி, ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவதற்கான நமது ஊக்கத்தை பலவீனப்படுத்துகிறது.

நம் மனமும் உடலும் எப்போதுமே இளைப்பாறிக் கொண்டிருக்கப் பழகும்போது, அர்த்தமுள்ள இலக்குகளைத் தொடர்வதற்கான உந்துதலை இழக்கிறோம். எதுவுமே நம்மை உற்சாகப்படுத்தவோ அல்லது ஊக்குவிக்கவோ முடியாத ஒரு தேக்க நிலையின் சுழற்சியில் சிக்கிக்கொள்கிறோம்.

### கவனம் மற்றும் நோக்கத்தை இழத்தல்

அதிகப்படியாக தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பது சோம்பேறித்தனத்திற்கு வழிவகுப்பது மட்டுமல்லாமல், உண்மையான முக்கியத்துவம் கொண்ட காரியங்களிலிருந்து நம் கவனத்தை அகற்றி விடுகிறது. படிப்பு, வேலை, உறவுகள் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சி போன்ற முக்கியமான வேலைகள்கூட ஒதுக்கி வைக்கப்படுகின்றன. காரணம், நம் மனம் பொழுதுபோக்குகளில் மூழ்கி விடுவதுதான். எபிரெயர் 12:1 நமக்கு இவ்வாறு அறிவுறுத்துகிறது:

"**...பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, ... நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.**"

கவனச்சிதறல்களில் சிக்கிக்கொள்ள இடம் கொடுக்கும்போது, தேவன் நமக்கு முன் வைத்திருக்கும் ஓட்டத்தை மறந்துவிடுகிறோம். இந்த உலகத்தின் தற்காலிக இன்பங்களில் அதிகமாக மூழ்கி இருப்பதால், நம் அழைப்பும் நோக்கமும் பெரும்பாலும் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

### நிஜ வாழ்க்கை உதாரணம்

*ஒரு கல்லூரி பேராசிரியர் பகிர்ந்துகொண்ட கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. வேலைவாய்ப்பு நேர்காணல்களின்போது, நல்ல திறமையான அவருடைய மாணவர்களில் ஒருவரைக் காணவில்லை. தேடிப் பார்த்தபோது, அவர் தன் விடுதி அறையில், ஒரு கொரியன் (Korean) நாடகத்தில் மூழ்கிப்போயிருப்பதைக் கண்டார். இந்த மாணவர் அந்த நிகழ்ச்சியில் மூழ்கிப் போனதால், தன் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய வாய்ப்பைத் தவறவிட்டார்.*

ஆம், இன்றைய இளைஞர்கள் இத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகி வருகின்றனர். இந்த அடிமைத்தனங்கள் வாய்ப்புகளை இழக்கச் செய்கின்றன, ஆற்றலை வீணாக்குகின்றன. மேலும், கவனக்குறைவான வாழ்க்கையை உருவாக்குகின்றன.

### இத்தகைய அடிமைத்தனங்களுக்கு எதிரான வேதாகமத்தின் எச்சரிக்கை

நீதிமொழிகள் 25:28 இவ்வாறு கூறுகிறது:

"**தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்.**"

நாம் சுயக்கட்டுப்பாட்டை இழக்கும்போது, தீங்கு விளைவிக்கும் பழக்கவழக்கங்கள் நம் வாழ்வில் ஊடுருவ அனுமதிக்கிறோம். இதனால் நாம் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும், பாதுகாப்பற்றவர்களாகவும் மாறுகிறோம். தொடர்ந்து நிகழ்ச்சிகளை அதிகமாக பார்ப்பது இப்போது தீங்கற்றதாக தோன்றலாம், ஆனால் காலப்போக்கில், அது நம் ஒழுக்கத்தைக் குலைத்து, குறிக்கோள்களைப் பாதிக்கிறது. மற்றும் நம் வாழ்க்கையில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்தக்கூடிய மதிப்புமிக்க நேரத்தை நம்மிடமிருந்து பறிக்கிறது.

### தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது நம் குணத்தை எவ்வாறு உருவாக்குகிறது?

என் நண்பரே, தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பது பாவமா என்று கேட்டீர்கள். வெறும் பொழுதுபோக்காக இருப்பதைத் தாண்டி, அதிகப்படியாக தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பது நம் எண்ணங்கள், மதிப்புகள் மற்றும் உணர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்தி, நம் குணத்தை உருவாக்குகிறது.

### நம் மதிப்புகள் மீதான தாக்கம்

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டே இருக்கும்போது, அவை ஊக்குவிக்கும் மதிப்புகளை நம்மையும் அறியாமல் உள்வாங்கிக் கொள்கிறோம். நம் மனம் தொடர்ந்து புதிய தகவல்களைப் பெறுகிறது. அதில் பெரும்பாலானவை உலக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலிருந்து வந்தால், அந்த மதிப்புகளே நம் எண்ணங்களை வடிவமைக்கத் தொடங்குகின்றன.

நீதிமொழிகள் 4:23 நம்மை இவ்வாறு எச்சரிக்கிறது:

"**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**"

நம் இருதயங்களுக்குள் நுழையும் காரியங்களில் நாம் கவனமாக இராவிட்டால், இந்த நிகழ்ச்சிகள் சித்தரிக்கும் காரியங்கள் இயல்பானதுதான் என்று நம்ப தொடங்கிவிடுவோம்.

### தவறான மதிப்புகளின் நுட்பமான இயல்பாக்கம்

இன்றைய பல நிகழ்ச்சிகள் சீர்குலைந்த மதிப்புகளை ஊக்குவித்து, பின்வரும் கருத்துக்களை இயல்பாக்குகின்றன:

### திருமண வாழ்க்கை சரிவராது

மகிழ்ச்சியாக இருக்க, திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஒருவரைப் பாருங்கள், ஆனால் திருமணம் செய்யாமலே அவருடன் வாழுங்கள்.

குடும்பங்கள் உடைந்து, உறவுகள் நிலையற்றதாகி, அர்ப்பணிப்பு கேலி செய்யப்படும் சூழ்நிலைகளைத் தொடர்ந்து நிகழ்ச்சிகளில் பார்க்கும்போது, இதுபோன்ற விஷயங்கள் இயல்பானவை என்று நம்ப தொடங்கிவிடு

கிறோம். படிப்படியாக, இந்த சீர்குலைந்த மதிப்புகளை நம் சொந்த வாழ்க்கையிலும் ஏற்றுக்கொள்கிறோம்.

இதைப் பற்றி ஏசாயா 5:20 இவ்வாறு எச்சரிக்கிறது:

“**தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!**”

விழிப்புடன் இல்லாவிட்டால், இந்த நிகழ்ச்சிகள் நம் ஒழுக்கத் தரங்களை நுட்பமாக மறுவரையறை செய்து, தேவன் வடிவமைத்த வாழ்க்கையிலிருந்து நம்மை விலக்கிவிடும்.

### நேரம் மற்றும் நோக்கத்தைத் திருடுதல்

அதிகப்படியாகத் தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பது, நம் மதிப்புகளை உருவாக்குவதோடு, நம் நேரத்தையும் திருடுகிறது. நிகழ்ச்சிகளைப் பார்த்து பல மணிநேரங்கள் செலவிட்ட பிறகு, இவ்வளவு விலைமதிப்பற்ற நேரம் பயனற்றதாய் கடந்துவிட்டதே என்று உணருகிறோம். அதற்கு பதிலாக நீங்கள் செய்திருக்கக்கூடிய அனைத்து அர்த்தமுள்ள காரியங்களையும் யோசித்துப் பாருங்கள்:

- உங்கள் காரைக் கழுவியிருக்கலாம்.
- உங்கள் ஆடைகளை ஒழுங்கமைத்திருக்கலாம்.
- உங்கள் குடும்பத்துடன் தரமான நேரத்தைச் செலவிட்டிருக்கலாம்.
- தேவையுள்ள ஒருவருக்கு உதவியிருக்கலாம்.
- உங்கள் தொழில் அல்லது படிப்பை முன்னேற்றுவதற்கான வழிகளை ஆராய்ந்திருக்கலாம்.

**உங்கள் வளர்ச்சிக்கு உதவும் வேலை, மனப்பான்மை மற்றும் ஆரோக்கியத்தில் நேரத்தை முதலீடு செய்யுங்கள்**

எபேசியர் 5:15-16 இதை நமக்கு நினைவூட்டுகிறது:

“**ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளான தால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.**”

நம்மை உருவாக்காத பொழுதுபோக்குக்கு நேரம் கொடுக்கும்போது, நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்கள் முன்னேறிச் செல்வார்கள். நாம் மட்டும் தேங்கி நிற்போம். நாம் வளர்ச்சியடைவதற்கும், மேம்படுவதற்கும், மற்ற வர்களிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவதற்குமான வாய்ப்புகளை இழந்துவிடுவோம். ஆம், தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருப்பது தேவனோடு செலவிட வேண்டிய நேரத்தைக் கொள்ளையடிக்கிறது. அது அவருடைய சத்தத்தைக் கேட்பதிலிருந்தும், அவரு டைய வார்த்தையைப் படிப்பதிலிருந்தும், ஆவிக்குரிய விதத்தில் வளருவதிலிருந்தும் நம்மைத் தடுக்கிறது. நம் மனம் தொடர்ந்து நிகழ்ச்சிகளால் ஆக்கிரமிக்கப்படும் போது, அமைதியாக இருந்து தேவனுடைய சத்தத்தைக் கேட்கத் தவறிவிடுகிறோம். நம் வாழ்க்கைக்கான அவரு டைய அழகான திட்டங்களையும் அறிவுறுத்தல்களையும் இழக்கிறோம்.

### சாமுவேலின் கவனிப்பிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

சின்ன சாமுவேலின் வாழ்க்கையைப் பாருங்கள். மிகச் சிறிய வயதிலேயே, சாமுவேல் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு, ஆசாரியனாகிய ஏலியின் தலைமை யில் உண்மையுடனும் கவனத்துடனும் ஊழியம் செய்தார். ஏலி சொல்வதை கவனித்துக்கேட்டு, உண்மை யுடன் தன் கடமைகளைச் செய்தான். சாமுவேலின் கவனிக்கும் பண்பினால் தேவன் அவனிடம் பேசத் தீர்மானித்தார்.

1 சாமுவேல் 3:10 இவ்வாறு கூறுகிறது:

“**அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்றான்.**”

நாம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புவதைத் தீவிரமாகச் செய்யும்போது, அவர் நம்மிடம் பேசி, தம் திட்டங்களை வெளிப்படுத்துவார். சாமுவேலின் இருதயம் கேட்பதற்கு திறந்திருந்ததால், தேவன் அவரிடம் இஸ்ரவேலின் எதிர்காலத்தைப் பற்றிய காரியங்களை ஒப்புவித்தார்.

### தேவனுக்கு செவிகொடுக்க ஓர் அழைப்பு

அன்பான நண்பரே, நாம் இந்த உலகத்தின் பொழுதுபோக்குகளில் சிக்கிக் கொள்ளாதிருப்போமாக. மாறாக, நம்மை மேம்படுத்தி தேவனிடம் நெருங்கச் செய்யும் காரியங்களில் நம் நேரத்தை முதலீடு செய்யத் தீர்மானிப்போம். சங்கீதம் 101:3 இவ்வாறு அறிவிக்கிறது: “**தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்; வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக் கிறேன்; அது என்னைப் பற்றாது.**”

நாம் உலகப்பிரகாரமான நிகழ்ச்சிகளில் மூழ்கியிருந்தால், நம் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்களையும் வழிகாட்டுதல்களையும் கேட்கத் தவறிவிடுவோம். மாறாக, சாமுவேலைப் போல, நம் இருதயங்களைத் திறந்து, “கர்த்தாவே, சொல்லும், அடியேன் கேட்கிறேன்” என்று சொன்னால், அவருடைய சித்தத்தின்படி நடக்கும் அழகை அனுபவிப்போம்.

நாம் கடந்த காலத்திலிருந்து விடுபட்டு, புதியதொரு தாளத்திற்குள் - கவனம், வளர்ச்சி மற்றும் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதுமாகிய தாளத்திற்குள் - அடியெடுத்து வைக்கவேண்டிய நேரம் இது. இன்று உங்கள் இருதயத்தைத் திறந்திடுங்கள். அவர் உங்களுக்கு சிறந்த காரியங்களைக் கற்பிக்கட்டும். பலவிதமான சத்தங்களை யும், கவனச்சிதறல்களையும் அடக்கி, தேவனுடைய அழகான குரலைக் கேட்க உங்கள் இருதயத்தைத் திறக்கத் தீர்மானியுங்கள். அவர் பேசத் தயாராக இருக்கிறார். கேட்க நீங்கள் தயாரா? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**இதுபோன்ற கேள்விகள் இருந்தால்,**
uturn@jesuscalls.org **என்ற முகவரிக்கு**
**உங்கள் கேள்விகளை மின்னஞ்சல் செய்யவும்.**



# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

பிரியமான ஊழிய பங்காளரே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! இந்த புதிய மாதத்திற்குள் பிரவேசித்திருக்கிற உங்கள்மீது, ‘‘இடம்கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணுவேன்’’ (மல்கியா 3:10) என்ற அற்புதமான ஆசீர்வாதத்தை ஆண்டவர் கொடுக்கிறார். அவர் குறைவுகளின் தேவன் அல்ல. மாறாக, நிரம்பி வழியும் ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறவராக இருக்கிறார். தசமபாகம், நேரம், காணிக்கை இவைகள் மூலமாக நாம் அவரை கனப்படுத்தும்பொழுது, அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து, நாம் விரும்புவதற்கும் அதிகமான ஆசீர்வாதங்களை நம்மீது பொழிந்தருளுவார். இது, வெறும் பணத்தேவையை சந்திப்பதற்கு மட்டுமல்ல, தெய்வீக தயவு, பாதுகாப்பு, முன்னேற்றங்கள், மீட்கப்பட்ட உறவுகள் மற்றும் ஏற்றக்காலத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட கதவுகள் திறக்கப்படுவதற்கும், ஊழியப் பங்காளராக நீங்கள், தேவனுடைய ராஜ்யத்தில் உண்மையாய் விதைத்திருக்கிறீர்கள். சில நேரங்களில் உண்மையுடனும், அழுகையுடனும் விதைத்திருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது, கீழ்ப்படிதலுடன் நீங்கள் விதைக்கும் ஒவ்வொரு விதையும், பரம பிதாவினால் கவனிக்கப்படாமல் மறைந்திருக்க மாட்டாது.

அநேக வேளைகளில், நாம் விசுவாசத்துடன் நம்முடைய கூடாரங்களை அகலப்படுத்தவும், நம்முடைய பங்குகளை பலப்படுத்தவும் முயற்சிக்கிறோம். காரணம், இடம்கொள்ளாமற்போகுமட்டும் ஆண்டவர் தம்முடைய ஆசீர்வாதங்களை ஊற்றப்போகிறார். ஆகவே, நாம் அவருடைய ஊழியத்தை முழு இருதயத்தோடும், அசைக்க முடியாத விசுவாசத்தோடும், ஒற்றுமையோடும் தொடர்ந்து செய்வோம். பெரிய அறுவடைக்கு இந்த பூமியை நாம் ஆயத்தம் பண்ணுவோம். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட, தேசங்கள் சந்திக்கப்பட உறுதியாய் நிற்போம்.

**அவருடைய நிரப்புதல் சமீபமாயிருக்கிறது**

கடந்த சில மாதங்களில் ஊழியத்தில் நடந்த நிகழ்வுகளின் முக்கிய அம்சங்களை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் நான் பேரானந்தமடைகிறேன். ஆண்டவர் செய்த அற்புதமான கிரியைகளுக்காக நாம் இணைந்து அவரை துதிப்போம்.

◆ மார்ச் 29, 2025 அன்று, இயேசு அழைக்கிறார் ஊழியம், எழுச்சிமிகும் ஜெபக் கூட்டம் ஒன்றை ஷார்ஜாவில் ஒழுங்கு செய்தது. இதில், ஐக்கிய அரபு எமிரெட்ஸ் முழுவதிலுமிருந்தும் பல்வேறு சபையைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். நாங்கள் குடும்பமாக, சுகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் உருக்கமான ஆராதனை, உள்ளத்தின் ஆழத்திலிருந்து பரிந்துரைக்கும் ஜெபம் மற்றும் உயிர்ப்பிக்கும் செய்தியின் மூலமாக இந்த ஊழியத்தை நடத்தினோம். பங்குபெற்ற ஒவ்வொருவரும் தேவ பிரசன்னத்தினால் வல்லமையான அற்புதங்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் தங்கள் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டு, விசுவாசத்தை புதுப்பித்து, தேவனுடைய தொடுதலை பெற்றவர்களாக கடந்துசென்றனர்.

◆ ஏப்ரல் 11, 2025 அன்று, நானும் என் குடும்பத்தினரும் 38 வருட இடைவேளைக்கு பிறகு, சென்னையிலுள்ள சி.எஸ்.ஐ. டக்கர் தேவாலயத்தில் ஊழியம் செய்தோம். ஆண்டவருடைய வல்லமையான பிரசன்னத்தினால் நிறைந்த ஆலய ஆராதனை மிகவும் உருக்கமான அனுபவமாக இருந்தது. என் தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்கள், சபையார்மீது அளவற்ற ஆசீர்வாதங்கள் இறங்கும்படி ஆண்டவரை நோக்கி உருக்கமான ஜெபத்தை

உங்கள் கூடாரத்தை விசாலமாக்குங்கள். உங்கள் மலைகளை உறுதிப்படுத்துங்கள். காரணம், அளவற்ற ஆசீர்வாதங்களை ஆண்டவர் உங்கள்மீது பொழியப்பண்ணுகிறார்

ஏறெடுத்தார்கள். நானும், மத்தேயு 8:17 என்ற வசனத்தின் அடிப்படையில், மன்னிப்பு, சமாதானம் மற்றும் தெளிந்த சிந்தையைக் கொண்டுவரும் கிறிஸ்துவின் இரத்தத்திலிருக்கிற வல்லமையைக் குறித்து தேவ செய்தி யளித்தேன். அநேகர் தேவனுடைய அன்பையும், நன்மைகளையும் பெற்று அகமகிழ்ந்தனர். ஆராதனையின் முடிவில் நம்பிக்கையுடனும், ஆவிக்குரிய உற்சாகத்துடனும் அனைவரும் கடந்துசென்றனர். இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலமாக தொடர்ந்து நடைபெறும் இந்த கிரியைகளுக் காக ஆண்டவருக்கே எல்லா மகிமையையும் ஏறெடுக்கிறேன்.

◆ ஏப்ரல் 13, 2025 அன்று, Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில், குருத்தோலை ஞாயிறு ஆசீர்வாதக் கூட்டம் நடைபெற்றது. என் மகள் ஸ்டெல்லா ரமோலா மற்றும் மருமகன் டேனியல் டேவிட்சன் இருவரும் இந்தக் கூட்டத்தை நடத்தினர். மத்தேயு 21:7-11 வசனங்களின்படி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்பொழுது உண்டாகும் மீட்பின் வல்லமையையும், மாற்றங் களையும் உறுதிப்படுத்தி, அவரை யூதர்களின் ராஜாவாகவும், மகிமையின் ராஜாவாகவும், பாவத்தின் மீது ராஜாவாகவும் பிரதிபலித்து, உற்சாகமான தேவ செய்தியை ஸ்டெல்லா ரமோலா வழங்கினார். கூட்டத்தின் இறுதியில், என் மனைவி சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் இயேசுவின் தாழ்மை யையும், தெய்வீகப் பணியையும் முக்கியப்படுத்தி, வல்லமையான மன்றாட்டு ஜெபத்தை ஏறெடுத்தார். தொடர்ந்து என் தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன், ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் சுகத்தையும், விடுதலையையும், மறுவாழ்வையும் கொடுக்கும்படி ஜெபித்தார்கள். ஒவ்வொருவரும் ராஜாதி ராஜாவின் பிரியமான பிள்ளைகளாக தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு திரும்பி சென்றனர்.

### சாம்பலுக்கு பதிலாக சிங்காரம்

**"சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்த வும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்கா ரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்மு டைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" (ஏசாயா 61:3)**

எங்கள் ஊழிய பயணத்தில், மே மாதம், ஒரு ஆழ்ந்த வரையறுக்கத்தக்க அத்தியாயத்தைக் குறிக்கிறது. காருண்யா பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க ஆண்டவர் என் தகப்பனார், சகோ. டி.ஜி.எஸ். தினகரனுக்கு தரிசனம் கொடுத்த போது, விவரிக்க முடியாத துக்கத்தினால் பாதிக்கப் பட்டோம். மே 21, 1986-ம் ஆண்டு, கொடிய கார் விபத்தில் என் அன்பு தங்கை ஏஞ்சலை நாங்கள் இழந்தோம். அந்த வேதனை மிகுந்த கொடியதாக இருந்தது. இருதயம் உடைக்கப்பட்ட அந்த நிலைமையிலும் ஆண்டவர் எங்களை சுமந்தார். இன்றைக்கு எண்ணிலடங்கா வாலிபப் பிள்ளைகளின் வாழ்க்கையை காருண்யா வடிவமைப்பதைப் பார்த்து, ஆண்டவர் எப்படி எங்கள் கண்ணீரின் பள்ளத்தாக்கை நீரூற்றாக மாற்றியிருக்கிறார் (சங்கீதம் 84:6) என்று நினைவுகூருகிறோம். எல்லாம் முடிந்தது என்று நினைக்கும் நேரத்தில் கர்த்தருடைய கிருபையால் எல்லாம் ஆரம்பமாகியது.

மே 1973, இயேசு அழைக்கிறார் பத்திரிகையின் முதல் இதழ் வெளியிடப்பட்டது. கடந்த 52 ஆண்டு களாக, அநேகருடைய வாழ்க்கையைத் தொட்ட ஒரு வல்லமையான பயணத்தின் தொடக்கத்தை இது குறிக்கிறது. இதன்மூலம் எண்ணற்ற மக்கள் சுகம், இரட்சிப்பு, மாற்றங்களை பெற்றவர்களாக சாட்சி கூறு வதால், எல்லா மகிமையும் ஆண்டவர் ஒருவருக்கே உண்டாவதாக.

**"கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது" (சங்கீதம் 136:1)**

டிஜிட்டல் யுகத்தை தழுவி, இயேசு அழைக்கிறார் பத்திரிகை இப்பொழுது ஆன்லைனில் கிடைக்கிறது. மற்றும் மின்னஞ்சல் வழியாக நேரடியாக Inbox களுக்கு வழங்கப்படுகிறது. www.jesuscalls.org என்னும் இணையதளத்தில் ஏழு மொழிகளில் அனுப்பப்படும் பத்திரிகையானது உலகெங்கிலுமுள்ள உள்ளங்களுக்கு ஆண்டவரின் நம்பிக்கையை தொடர்ந்து கொண்டுசெல்கிறது.

### டைனமிக் கிட்ஸ் கேம்ப்

**"ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னை சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோக மானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப் பான்" (2 தீமோத்தேயு 2:21)**

இந்த கோடை விடுமுறையை இயேசு அழைக் கிறார் ஜெப கோபுரங்கள் 6 முதல் 12 வயது வரை யுள்ள பிள்ளைகளின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஒரு வார கால முகாமை

நடத்துகிறது. இது, தெய்வீக பண்புகளை அவர்களுக் குள் வளர்க்கவும், அவர்களுடைய வாழ்க்கையை பலப்படுத்தவும் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். இந்த ஆண்டு முகாமின் கருப்பொருள், ''**கனத்திற்குரிய பாத்திரம்**''. மேலும் விவரங்களுக்கு, உங்கள் பகுதியி லுள்ள ஜெப கோபுரத்தை தொடர்புகொள்ளலாம். அல்லது www.jesuscalls.org என்ற இணைய தளத்தை பார்வையிடலாம். அல்லது kidsclub @jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். உங்கள் பிள்ளைகள் வேதாகமத்தை குதூகலம் நிரம்பிய விதத்தில் கற்றுக்கொள்ள நீங்கள் விரும்பினால், youtube-ல் வரும் இயேசு அழைக்கிறார் கிட்ஸ் சேனலை சப்ஸ்கிரைப் செய்யலாம். சிறு வயதிலிருந்தே அவர்கள் ஆண்டவரின் சத்தியத்தை பெற இது ஒரு சிறந்த வழியாகும். அதே நேரத்தில், அவர்களுக்கு அது கேளிக்கையாகவும் இருக்கும். நம்முடைய குழந்தைகளை ஆண்டவருடைய வழிகளில் வளர்ப்போம்.

## கல்வியில் சிறந்து விளங்குதல்

**''ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத் தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரி களிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்'' (தானியேல் 1:20)**

காருண்யாவில், தங்கள் நம்பிக்கையில் ஆழமாக வேரூன்றிய மற்றும் அவர்கள் வாழ்க்கையில் சிறந்து விளங்கும் நிபுணர்களை உருவாக்குவதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். இந்த தொலைநோக்கு பார்வையை ஆதரிக்க இளம் மனங்களின் வளர்ச் சியை வளர்க்கும் காருண்யா கிறிஸ்தவ பள்ளியை யும், வாலிபப் பிள்ளைகள் தாங்கள் தேர்வு செய்யும் துறைகளில் செழிக்க காருண்யா பல்கலைக்கழகத் தையும் நிறுவியுள்ளோம். வரவிருக்கும் கல்வியாண் டில் காருண்யா கிறிஸ்தவ பள்ளி மற்றும் காருண்யா பல்கலைக்கழகம் இரண்டிற்கும் மாணவர் சேர்க்கை ஆரம்பமாகியுள்ளது என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பள்ளி சேர்க்கை பற்றிய கூடுதல் தகவல்களுக்கு www.kcs.edu.in என்ற இணையதளத்தை பார்வையிடுங்கள். கல்லூரி சேர்க்கைகளுக்கு www.karunya.edu என்ற இணையதளத்தை அணுகுங்கள்.

## பெதஸ்தா ஜெப மையம்

**''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்க ளுக்கு இளைப்பாறுதல் தருவேன்''**

**(மத்தேயு 11:28)**

இயற்கை எழில் சூழ்ந்த இந்த ஜெப மையம் ஜெபத்திற்கும் தியானத்திற்கும் வாழ்க்கையின் பிரதிபலிப்பிற்கும் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கும் இடமளிக்கிறது. ஜெபத்தின் மூலமாகவும் ஆண்டவரு டைய அற்புத தொடுதல் மூலமாகவும் கணக்கற்றோ ரின் வாழ்க்கை சாட்சியாக மாறியுள்ளது. பெதஸ்தா ஒரு கலங்கரை விளக்காக திகழ்கிறது. இந்த ஜெப மையத்தில் நடத்தப்படும் ஜெபக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள் மூலமாக, ஒவ்வொரு தனி நபரும் தங்கள் சரீரத்திலும், மனதிலும், ஆவிக்குரிய வாழ்க் கையிலும் ஆசீர்வாதம் பெற வழிநடத்தப்படுகிறார்கள். இந்த கோடை காலத்தில் நீங்களும் புத்துணர்ச்சி யையும் மறுமலர்ச்சியையும் பெற்றுக்கொள்ள பெதஸ்தா ஜெப மையத்திற்கு வருகை தரும்படி உங்களை அன்புடன் வரவேற்கிறோம். தனிப்பட்ட விதத்தில் சுகம், ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ள விரும்புகிறவர் களுக்கு பெதஸ்தா ஜெப மையம் அடைக்கல பட்டணமாக விளங்குகிறது. இந்த கோடை காலத்தில் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வல்லமை நிறைந்த ஜெபங்களை அனுபவிக்கும் சிலாக்கியத்தை விட்டுவிடாதீர்கள்.

எதிர்நோக்கியுள்ள கூட்டங்களைக் குறித்து உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். காரணம், உங்கள் ஜெபங்கள் எங்களுக்கு தேவை.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

- மே 9 - 11 காக்கிநாடா பிரார்த்தனை திருவிழா, ஆந்திரா
- நவம்பர் 28 - 30 மஹாராஷ்டிரா ஆசீர்வாத பிரார்த்தனை திருவிழா

மே 24-ம் தேதி, என் அருமை தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்களும், மே 9-ம் தேதி என் மருமகன் டேனியல் டேவிட்சனும் தங்களுடைய பிறந்தநாட்களை கொண்டாடுகிறார்கள். ஆண்டவர் அவர்களுக்கு நற்சுகத்தையும், இன்னும் கூடுதலான வல்லமையையும் கொடுத்து, ஊழியத்தில் பயன் படுத்தும்படி எல்லா கிருபையையும் அருளும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்.

மீண்டுமாக, மல்கியா 3:10-ல், கூறப்பட்டுள்ள ஆண்டவருடைய வாக்குத்தத்தம் உங்கள் வாழ்க்கை யில் நிறைவேறும்படி, உள்ளத்தின் ஆழத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறேன். உங்கள் வாழ்க்கையின் எல்லா பக்கத்திலும் ஆண்டவருடைய ஆசீர்வாதங்கள் வருஷிக்கப்படுவதையும் வழிந்தோடு வதையும் நீங்கள் அனுபவிப்பீர்களாக. என்னுடைய ஜெபத்தில் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நினைக்கிறேன். ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் சகோதரன்,

Dr. பால் தினகரன்.

## இழந்த அனைத்தையும் ஆண்டவர் மீட்டெடுத்தார்

நான் 12 -ம் வகுப்பு படிக்கும்போது, என் பெற்றோரை இழந்தேன். என் உறவினர்கள் என் வீட்டையும் சொத்துக்களையும் அபகரித்துகொண்டனர். சட்டைப் பையில் வெறும் 350 ரூபாயுடன் தப்பி பெதஸ்தா வந்து சேர்ந்தேன். அப்பொழுது, ஒரு பிரசங்கியார் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் என் விசுவாசத்தை துளிர்த்து, எனக்குள் நம்பிக்கையை ஏற்படுத்தியது. வெகுசீக்கிரத்தில் நீதிபதி எனக்கு ஆதரவாக தீர்ப்பளித்தார். இழந்த எல்லாவற்றையும் நான் மீட்டுக்கொண்டேன். இன்று, என் மனைவியுடன் அருமையான வாழ்க்கை வாழவும், இழந்த அனைத்தையும் ஆண்டவரால் எவ்வாறு மீட்டெடுக்க முடியும் என்பதற்கு நான் ஒரு உயிருள்ள சாட்சியாகவும் நிற்கிறேன்!

- தங்கராஜ், கோயம்புத்தூர்.

**சகோதரர் தங்கராஜ் போலவே, நீங்களும் பெதஸ்தா பிரார்த்தனை மையத்திற்கு சென்று உங்கள் தேவைகளுக்காக பிரார்த்தனைகளை பெறுவதன் மூலம் ஆசீர்வாதங்களை காணலாம் மற்றும் உங்கள் எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுபடலாம்.**

பெத்தேலில், யாக்கோபு பெற்ற தெய்வீக சந்திப்பு போலவே, இங்கு வரும் பார்வையாளர்கள் ஆண்டவரின் உறுதியான பிரசன்னத்தையும், வல்லமையையும் அனுபவிக்கின்றனர். ஜெபங்கள் தூபவர்க்கமாக மேலே செல்வதும், பதில்கள் இறங்குவதுமாக இருக்கிறது. அற்புதங்களையும், விடுதலையையும் ஆசீர்வாதங்களையும் அளித்து, உள்ளம் உடைந்தோரின் கண்ணீரைத் துடைக்கிறது.

# பெதஸ்தா பிரார்த்தனை மையம்




## 2024-ல் 3,00,000 பார்வையாளர்கள்







**பெதஸ்தா ஜெபம் மண்டபம் தினமும் [ஆண்டு முழுவதும் 365 நாட்களும்] காலை 6 முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்**

பூமி பரலோகத்தை சந்திக்கும் இந்த பரிசுத்த இடத்தில், ஆயிரக்கணக்கானோர் கூடிவந்து, தேவனுடைய பிரசன்னத்தில் ஜீவனுள்ள சாட்சிகளாக மாறுகிறார்கள்.

இந்த கோடை காலத்தில், உங்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தையோ, பதிலையோ அனுபவிக்க - சுகமோ, சமாதானமோ, ஆலோசனையோ அல்லது ஒரு பிரச்சனைக்கு தீர்வாகவோ இருக்கலாம். பெதஸ்தா ஜெப மையத்திற்கு வாருங்கள். இது உங்கள் வாழ்க்கையை மாற்றும் தேவனுடைய சந்திப்பு.

**தங்கும் வசதிகள் உள்ளது**

அருகிலுள்ள இடங்கள்:
கோவை குற்றாலம் (6 கி.மீ.)
கோவை கொண்டாட்டம் (15 கி.மீ.)

**FOR GROUP BOOKING, ACCOMODATION PLEASE CALL:**
**94878 96566**
**94878 46545**
*Email: bobethesda@jesuscalls.org*
*Website: www.jesuscalls.org*

# பெரியோரை கனப்படுத்துதல்



பெரியோர்களை கனப்படுத்துதல் என்பது வேதாகம போதனைகள், கலாச்சார மரபுகள் மற்றும் நெறிமுறைகளில் ஆழமாக வேரூன்றி காணப்படும் ஒரு அடிப்படை பண்பாகும். நமக்கு முன் வாழ்ந்து சென்ற பெரியவர்களை கனப்படுத்தின வர்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்களை வேதாகமம் மீண்டும் மீண்டும் முக்கியப் படுத்துகிறது. இளமை, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தன்னம்பிக்கையை அதிகளவில் மதிக்கும் இந்த உலகில், பெரியவர்களுக்கு மரியாதையை யும், கனத்தையும் கொடுக்க வேண்டும் என்ற வேதாகமத்தின் அறைகூவல், பழைய தலைமுறையினரின் ஞானம், அனுபவம் மற்றும் வழிநடத்துதல் எத்தனை விலைமதிப்பற்றது என்பதை ஞாபகப்படுத்துகிறது.

**வாலிபர் பகுதி**

ஒரு வேதாகம வாக்குத்தத்தம்: பெரியோர்களை மதிப்பதைக் குறித்த ஒரு தெளிவான வாக்குத்தத்த வசனம் வேதாகமத்தில் உள்ளது.

> “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.”
> (யாத்திராகமம் 20:12)

பத்து கட்டளைகளில் ஒரு பகுதியாக இருக்கும் இந்த கட்டளை, பெரியோருக்கு, குறிப்பாக பெற்றோருக்கு கனத்தை கொடுப்பதுடன் நேரடியாக இணைத்து, அதனிமித்தம் நீடித்த வாழ்நாட்களையும் ஆசீர்வாதங்களையும் கொண்டுவரு கிறது. இதனை அப்போஸ்தலனாகிய பவுல், “வாக்குத்தத்தம் நிறைந்த முதல் கட்டளை” என மீண்டும் வலியுறுத்துகிறான் (எபேசியர் 6:2-3). பெரியவர்களை கனம்பண்ணுதல் வெறும் கடமை மட்டுமல்ல, ஆண்டவரின் தயவை பெறுவதற்கான ஒரு வழியுமாகும்.

**பெரியவர்களை கனம்பண்ணுவதில் வேதாகம எடுத்துக்காட்டுகள்**

**யோசேப்பு தன் தந்தைக்கு காண்பித்த பயபக்தி:**

பெரியவர்களை கனப்படுத்துவதில் யோசேப்பின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது. எகிப்தில், பார்வோனுக்கு அடுத்தபடியாக, அந்த தேசம் முழுமைக்கும் அதிகாரியாக யோசேப்பு இருந்தபோதிலும், தன்னுடைய தந்தையின் முன்பாக பயபக்தியுடன் காணப்பட்டார். யாக்கோபு, எகிப்துக்கு வந்தபோது, யோசேப்பு அவரை சந்தித்து, அவரை கட்டித்தழுவி, நீண்ட நேரம் அழுதார் (ஆதி. 46:29). யாக்கோபின் வயதான காலத்திலும், யோசேப்பு தன்னுடைய தந்தையின் நல்வாழ்வை உறுதிசெய்து, அவருக்கும், அவரது வீட்டார் அனைவருக்கும் தேவையானவற்றை வழங்கி வந்தார். யாக்கோபு மரிக்கும் நேரத்தில், யோசேப்பு தன்னுடைய இரண்டு மகன்களான எப்பிராயீம் மற்றும் மனாசேயை தன் தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெற அழைத்து சென்றது, யாக்கோபின் ஆவிக்குரிய ஆளுகைக்கு, அவன் காண்பித்த ஆழமான மரியாதையைக் குறிக்கிறது (ஆதியாகமம் 48:12-20).

**ரூத், நகோமியை கனம்பண்ணுதல்:**

ரூத் மற்றும் நகோமியின் வாழ்க்கை, பெரியவர்களை கனப்படுத்துவதற்கான மற்றொரு உதாரணமாக விளங்கு கிறது. இளம் விதவையான ரூத், எங்கு சென்றாகிலும் தன்னுடைய புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க தகுதியோடு இருந்தாள். எனினும், அன்பிற் கும் கனத்திற்கும் அவள் இடங் கொடுத்து, வயதான தன் மாமியார் நகோமியுடன் தங்கு வதற்கு முடிவெடுத்தாள். “நீர் போகும் இடத்திற்கு நானும் வரு வேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்மு டைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய



Dr. ஷில்பா தினகரன் - shilpasd@jesuscalls.org

தேவன் என்னுடைய தேவன்'' (ரூத் 1:16). ரூத்தின் இந்த விசேஷ வார்த்தைகள், பக்தியும் கனமும் நிறைந்த அவளுடைய இருதயத்தை பிரதிபலித்தது. நகோமியின்மீது ரூத் வைத்திருந்த விசுவாசம், கனம் இவைகளினிமித்தம் ஆண்டவர் அவளை மிகுதியாக ஆசீர்வதித்தார். அவள், தாவீது ராஜாவின் கொள்ளுப் பாட்டியாகவும், இயேசுவின் வம்ச வரலாற்றில் முக்கிய இடத்தையும் பெறுகிறாள் (மத்தேயு 1:5).

> பெரியவர்களை மதிப்பது என்பது சமூக கடமை மட்டுமல்ல; அது ஆசீர்வாதங்களை சுமக்கும் தெய்வீக கொள்கையாகும்

### தாவீது, சவுல் ராஜாவுக்கு கனத்தை செலுத்துதல்

இஸ்ரவேலின் அரசனாகிய சவுல், தாவீதை கொல்ல முயன்றபோதும், தாவீது அவனுக்கு தீங்கு செய்யவோ, அவமதிக்கவோ முன்வரவில்லை. பழிவாங்க தாவீதுக்கு வாய்ப்புகள் இருந்தும், சவுல் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதால், தாவீது அவருக்குரிய கனத்தை செலுத்தினார் (1 சாமுவேல் 24:6). சவுலின் வாழ்வில் அநீதியான நடத்தை இருந்தபோதிலும், ஒரு பெரியவரை கனப்படுத்தும் தாவீதின் இந்த செயல், அவனது குணத்தையும், அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவன் என்பதையும் வெளிப்படுத்தியது. ஆகவே, கர்த்தர் தாவீதை இஸ்ரவேலின் மிகப் பெரிய ராஜாவாக உயர்த்தினார்.

### பெரியவர்களை அவமதிப்பதன் விளைவுகள்

அவமதிப்பது, மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்பதை உணர்த்தும் வகையில், பெரியோரை அவமதித்தல் குறித்து வேதாகமம் நமக்கு எச்சரிக்கிறது. சிறு பிள்ளைகளின் கூட்டம் ஒன்று, தீர்க்கதரிசி எலிசாவை கேலி செய்து, அவரை ''மொட்டைத்தலையா'' என்று அழைத்தது (2 இராஜாக்கள் 2:23-24). இதன் விளைவாக, காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளை பீறிப்போட்டது. இது கடுமையாக தோன்றினாலும், ஞானத்திலும் அதிகார பொறுப்பிலும் ஆண்டவர் நியமித்தவர்களை பயபக்தியுடன் நடத்தவேண்டும் என்பதை இது கோடிட்டு காட்டுகிறது. இதைப்போன்று, தாவீதின் குமாரனான அப்சலோம், தன்னுடைய தந்தைக்கு விரோதமாக கலகம் செய்து அவரை அவமதித்தான் (2 சாமுவேல் 15-18). அவனுக்கு புத்திசாலித்தனமும் சௌந்தரியமும் இருந்தபோதிலும், அவன் காண்பித்த அவமரியாதை, அவனுடைய பரிதாப முடிவுக்கு அவனை கொண்டுசென்றது.

*பிரியா என்ற இளம் பெண் சுதந்திரமாய் வாழ அதிக முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு நவீன நகரத்தில் வாழ்ந்து வந்தாள். அவள் தன்னுடைய உயர்கல்வி மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையை தொடர்ந்தபோது, அவளுடைய பாட்டியின் ஆலோசனையை காலம் கடந்ததாக கருதி அதை உதாசினப்படுத்தினாள். எனினும், அவளுடைய பாட்டியம்மா விசுவாச பெண்ணாக இருந்தபடியால், பணிவு, பொறுமை மற்றும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை அவளுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தி வந்தார்கள்.*

*ஒரு நாள், பிரியா தன்னுடைய வேலையில் ஒரு கடுமையான சோதனையை சந்திக்க நேர்ந்தது. அவளுடைய உத்தமம் பரீட்சிக்கப்பட்டது. அவள் தன்னுடைய கோட்பாடுகளை விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது போல் தோன்றியது. சோர்ந்துபோன அந்த நேரத்தில், அவளுடைய பாட்டியம்மா கொடுத்த ஞானமுள்ள ஆலோசனை ஞாபகத்திற்கு வந்தது: ''நீதியில் நடப்பவர்களை ஆண்டவர் கனப்படுத்துவார்.'' அன்று மாலை, அவள் தன் பாட்டியை சந்தித்து, தனது போராட்டங்களை பகிர்ந்துகொண்டாள். அவளுடைய பாட்டி அவளுடன் இணைந்து ஜெபித்து, உறுதியாக நிற்க அவளை உற்சாகப்படுத்தினார்கள்.*

*வேலையை இழக்கும் சூழ்நிலை இருந்தபோதிலும், பிரியா தன் பாட்டியம்மாவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய நற்பண்புகளை பற்றிக்கொள்ள முடிவெடுத்தாள். ஆச்சரியப்படும் விதமாக, அவளுடைய நேர்மையை ஒரு மூத்த மேலாளர் கவனித்தார். நல்ல நிலைக்கு அவள் உயர்த்தப்பட்டாள். அந்த நேரத்தில், பெரியவர்களை மதித்து, அவர்கள் சொல்வதை கேட்பதன் மதிப்பை அவள் உணர்ந்தாள்.*

ஆம், பெரியவர்கள் தங்கள் ஞானத்தாலும் அனுபவத்தாலும், இளைய தலைமுறையினரை வெற்றி மற்றும் நீதியை நோக்கி வழிநடத்த முடியும்.

### பெரியவர்களுக்கு மதிப்பு கொடுப்பதற்கான நடைமுறை வழிகள்

1. **கவனத்துடன் கேளுங்கள்** - பெரியவர்களிடம் மதிப்புமிக்க வெளிப்பாடுகளை வழங்கக்கூடிய வாழ்க்கை அனுபவங்கள் உள்ளன. ஆகவே, அவர்கள் பேசும்போது, பொறுமையுடனும் மரியாதையுடனும் கேளுங்கள்.
2. **அவர்களுடைய ஆலோசனையை தேடுங்கள்** - வழி காட்டுதலுக்காக பெரியவர்களை அணுகுவதும், அவர்களின் ஞானத்தை ஏற்றுக்கொள்வதும் அவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அவர்களை உணர வைக்கிறது.
3. **கனிவாக பேசுங்கள்** - மரியாதைக்குரிய மொழி மற்றும் தொனியை பயன்படுத்தும்போது, அதில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அது கனத்துக்குரியதாகும்.
4. **அவர்களின் தேவைகளை பராமரித்தல்** - அவர்களுடன் நேரத்தை செலவிடுவது, அன்றாட பணிகளில் உதவுவது அல்லது அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்வது என எதுவாக இருந்தாலும், பெரியவர்களை பராமரிப்பது என்பது, அன்பையும் கனத்தையும் வெளிப்படுத்தும் ஒரு செய்கையாகும்.
5. **அவர்களுக்காக ஜெபியுங்கள்** - ஜெபத்தில் பெரியவர்களை ஆதரிப்பது என்பது அவர்களை ஆசீர்வதிப்பதற்கும், அவர்களின் வாழ்க்கையில் தொடர்ந்து ஆண்டவரின் தயவை தேடுவதற்கும் வழியாகும்.

பெரியவர்களை மதிப்பது என்பது ஒரு சமூக கடமை மட்டுமல்ல; அது ஆசீர்வாதங்களை சுமக்கும் ஒரு தெய்வீக கொள்கையாகும். யோசேப்பு, ரூத் மற்றும் தாவீது ஆகியோரின் வேதாகம உதாரணங்களின் மூலமாகவோ அல்லது வாழ்க்கையின் உண்மை அனுபவங்கள் மூலமாகவோ, பெரியவர்களை கனப்படுத்துவது, கொடுப்பவர் மற்றும் பெறுபவர் இருவரையும் வளப்படுத்துகிறது. நாம் பெரியவர்களை மதிக்கும்போது, ஆண்டவரின் ஆசீர்வாதங்களை நம் வாழ்வில் பெற்றுக்கொள்கிறோம் என்பதை யாத்திராகமம் 20:12 நமக்கு உறுதியளிக்கிறது. வேகமாக மாறிவரும் உலகில், முன்னோர்களின் காலத்தால் அழியாத ஞானத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது, ஏனென்றால், அவர்களின் அடிச்சுவடுகளில், நாம் வழிநடத்துதலையும், உறுதியையும், தெய்வீக தயவையும் பெறுகிறோம்.



# ஜிம் & ஜெமி

## விடுமுறை நாட்களில் ஜிம்மும் ஜெமியும் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள முயன்றனர்
















### கதையின் நீதி:

விடுமுறை நாட்களில் உங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டால், அவற்றை தேவ மகிமைக்கென்று பயன்படுத்த முடியும்.

மனப்பாட வசனம்:

**"எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்"** - கொலோசெயர் 3:24



# தொலைபேசி ஜெப ஊழியம்

## ஒவ்வொரு மாதமும் 3,80,000-க்கும் அதிகமானோருக்கு ஜெப சேவை

"அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18:19)

### திருமணத்தை ஆண்டவர் மீட்டெடுத்தார்

நான் என் திருமணத்தை மகிழ்ச்சியுடன் தொடங்கினாலும், சில மாதங்களில் எங்களுக்குள் ஏற்பட்ட தகராறுகளும், சரீரத்தில் நான் அடிபட்டதன் காரணமாகவும் வேதனையுடன் பிரிந்து, விவாகரத்து என்பது முடிவாக தோன்றியது. இந்த துயர நேரத்தில், இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டது எனக்கு நம்பிக்கை அளித்தது. விவாகரத்து ஆவணங்களில் கையெழுத்து போடுவதற்கு சில மணி நேரங்களுக்குமுன், என் கணவர் எதிர்பாராதவிதமாக வந்து, கண்களில் கண்ணீருடன், மனமாற்றத்துடன், மீண்டும் குடும்ப வாழ்க்கையை தொடர முன்வந்தார். இன்று, நாங்கள் ஒரு சந்தோஷமான குடும்பமாக வாழ்கிறோம். தேவன் எங்களுக்கு அழகான மகளையும் ஆசீர்வாதமாக கொடுத்துள்ளார்.

**சகோதரி பாவனாவின் கதை, இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுரம் மூலம் ஆண்டவரின் உண்மைத்தன்மையின் எண்ணற்ற சாட்சிகளில் ஒன்றாகும்.**

உலகெங்கிலும் வேதனையிலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்காக 24 X 7 பரிந்துபேசும் ஜெபத்தை வழங்குகிறது இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுர ஊழியம். ஒவ்வொரு மாதமும், 3,80,000 க்கும் மேற்பட்டோர் தொடர்பு கொள்கின்றனர். பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் விசுவாசத்தில் நின்று அற்புதத்திற்காக நம்பிக்கையோடு ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தேவனுக்கு தெரியப்படுத்துகிறார்கள். அப்போஸ்தலர் 12 - ம் அதிகாரத்தில், சிறையிலிருந்த பேதுரு அற்புதமாக விடுவிக்கப்பட்டதைப்போல, ஊழியர்கள் ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது, விடுதலையும், சுகமும் உண்டாகிறது. ஒவ்வொரு ஜெப விண்ணப்பத்திற்கும் Dr. பால் தினகரன் தனிப்பட்ட ஜெபம் ஏறெடுக்கிறார். தேவனுடைய தொடுதலால் உடனுக்குடன் சமாதானத்தையும், விடுதலையையும் பெற்றுக்கொண்டதாக பலர் சாட்சி கூறுகின்றனர்.

உங்கள் உதரத்துவமான நன்கொடை மூலம் இந்த தொலைபேசி ஜெப ஊழியத்தை ஆதரிக்க நாங்கள் உங்களை வரவேற்கிறோம். இந்த ஊழியத்திற்கான உங்கள் அர்ப்பணிப்பு, இன்னும் கோடிக் கணக்கானோருக்கு சேவை செய்ய எங்களுக்கு உதவும்.

**இப்போதே அழையுங்கள்**

**உங்களோடு ஜெபிக்க நாங்கள் இருக்கிறோம் - 24 X 7**

# 8546 999 000



ஊழியத்தைக் குறித்து மேலும் அறிந்துகொள்ள:
எங்களது பங்காளர் சேவை எண்ணை **044-23456677**
(காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை - இந்திய நேரம்) தொடர்புகொள்ளலாம்

---

நீங்கள் எங்களுடன் ஒரு தன்னார்வ தொலைபேசி ஜெப வீரராக 3, 6 அல்லது 8 மணிநேர பிரார்த்தனையில் ஈடுபட, ஜெப கோபுரங்களுக்கு நேரில் வருவதன் மூலமோ அல்லது உங்களுக்கு வசதியான இடத்திலிருந்து உங்கள் மடிக்கணினி/மேசை கணிப்பொறி (laptop/desktop) பயன்படுத்தியோ ஜெப அழைப்புகளை பெறலாம். நீங்கள் சேவை செய்ய முன் வரும்போது, உங்கள் வாழ்க்கையில் மட்டுமல்ல, நீங்கள் ஜெபிக்கிறவர்களின் வாழ்க்கையிலும், அடைக்கப்பட்ட வாசல்கள் திறக்கப்படுவதை காணலாம். நீங்கள் தன்னார்வ தொண்டு செய்வதில் ஆர்வமாக இருந்தால், +91 6380 752 266 என்ற தொலைபேசி எண்ணுக்கு அல்லது மின்னஞ்சல்: tpt@jesucalls.org-ஐ தொடர்புகொள்ளுங்கள்.



# கர்த்தர் விரும்பும் பயபக்தி நிறைந்த தெய்வீக வாழ்க்கை!

- சகோதரி **ஸ்டெல்லா தினகரன்**

இன்றைய நாட்களில் பெரும்பாலானோர் கிறிஸ்துவுக்குள் வாழும் தெய்வீக வாழ்வை முழுவதுமாக நாடித்தேட விருப்பம் கொள்ளாமல், உலகத்திலும், அதின் ஆசை, இச்சைக்கான காரியங்களிலுமே அதிக நாட்டம் கொள்கிறார்கள். மெய்யான பக்தி நிறைந்தவர்களாய், "கர்த்தர் சிநேகிக்கிற (மல்கியா 2:11) பரிசுத்தத்தை" நாடித் தேடாமல், நூற்றுக்குநூறு சதவீதம் லௌகீகம் நிறைந்த வாழ்விலேயே நாட்டம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அநேக கிறிஸ்தவக் குடும்பங்களிலே, ஆண்களும், பெண்களும் இணைந்து, ஏன் குடும்பமாகவும் மது அருந்தி, கொண்டாடி மகிழும் லௌகீகம் நிறைந்த பயங்கரமான காலமாயிருக்கிறது. எனவே தான், பாவம், சாபம், அக்கிரமம், அநியாயம் போன்ற பிசாசுக்குரிய காரியங்கள் நிறைந்த குடும்பங்கள், ஏராளமாகப் பெருகி இன்றைக்கு அழிவின் பாதைக்கு நேராகப் போய்க் கொண்டிருக்கின்றன.

அன்பானவர்களே! இப்படிப்பட்ட கேட்டின் புத்திரராக வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்களே! குடும்பத்தின் மக்களே! நரகத்துக்கு நேராக செல்லும் இப்படிப்பட்ட அழிவுக்குரிய பாதையிலிருந்து மனந்திரும்பி, ஆண்டவர் விரும்பும் தெய்வீக பாதைக்கு நேராக, திரும்பி வாருங்கள் என்று, உங்களை இன்று அன்புடனும், மிகுந்த தாழ்மையுடனும் அழைக்கிறேன்.

வேத புத்தகத்திலே, 1 கொரிந்தியர் 15:58-ஐ வாசித்து பாருங்கள்.

**"ஆகையால், எனக்கு பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக."**

இந்த வசனத்தின்படி, மூன்று காரியங்களில் பயபக்தியோடு நடக்கவும், கர்த்தருடைய இராஜ்யத்திற்கு செல்லும் தெய்வீக பாதைக்கு நேராக நடக்கவும், அவருக்கு பிரியமான விதத்தில் வாழ்ந்து, கர்த்தருடைய நிறைவான ஆசீர்வாதம் பெறவும் உங்கள் வாழ்வை அர்ப்பணியுங்கள்!

## நீங்கள் கர்த்தருக்குள் உறுதிப்பட்டவர்களாக மனந்திரும்பி வாழும்படிக்கு உங்களை அர்ப்பணியுங்கள்!

வேதம் கூறுகிறபடியே, இன்று உலகத்தில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய லௌகீக காரியங்களில், அநேகம் பேர், விசேஷமாக பெண்களும்கூட ஈர்க்கப்பட்டவர்களாக "கேட்டின் புத்திரராக" விளங்குகின்றனர். ஆனால், வேதம் என்ன சொல்லுகிறது? நீதிமொழிகள் 31:30-ல் வாசிக்கிறபடியே, "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது; அழகும் வீண்; கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" என்று நமக்கு தெளிவாகப் போதிக்கிறது.

இந்த வசனத்திற்கு தங்களை தாழ்மையுடன் அர்ப்பணித்து, உலக ஆசாபாசங்களுக்கு தங்களை கொஞ்சமும் அர்ப்பணிக்காமல், தெய்வ பயத்திற்கு முதலிடம் கொடுத்து, கர்த்தருடைய வழிகளில் நடப்பதில் ஜாக்கிரதையைக் காண்பிக்கிறவர்கள், விசேஷமாக பெண்கள் "கர்த்தருக்கு பிரியமானவர்களாக" விளங்கு வார்கள். அத்தகைய பெண்களை கர்த்தர், நீதிமொழிகள் 31:10-ல் வாசிக்கிறபடி, "விலையேறப் பெற்ற முத்தாகவும்" மாற்றி, தம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களால் நிறைத்து, தமக்கு பிரியமான வழிகளில் போதித்து வழிநடத்துவார். ஒவ்வொருநாளும் தமது சித்தப்படி கரம்பிடித்து நடத்துவார்.

**"நான் உனக்கு போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லு வேன்."** (சங்கீதம் 32:8)

வேத புத்தகத்திலே, மகதலேனா மரியாள் என்ற பெண், ஏழு பிசாசு கள் பிடித்தவளாய், ஆண்டவராகிய இயேசுவிடம் சுகம் நாடி வந்த பொழுது, அந்த பயங்கர நிலை யிலிருந்து முற்றிலுமாக அவள் விடுதலை பெற்றதோடு, அவரோடு கூடவேயிருந்து அவருக்கு ஊழியம் செய்யும் உன்னதமான பாக்கியம் நிறைந்த வாழ்வையும் பெற்றுக் கொண்டாள். அதோடுகூட, முடிவு பரியந்தம் அவள் கொண்டிருந்த தெய்வ பக்தியினிமித்தம், மரணத்தை ஜெயித்து உயிரோடெழுந்த இயேசு கிறிஸ்துவை முதன்முதலாக தரிசிக்கும் தெய்வீக பாக்கியத்தையும் இவ்வுலக வாழ்விலே ஆசீர்வாதமாய் பெற்றுக்கொண்டாள்.

> அழிவுக்குரிய பாதையிலிருந்து மனந்திரும்பி, ஆண்டவர் விரும்பும் தெய்வீக பாதைக்கு நேராக வாருங்கள்

எஸ்தர் ஜெபக்குழுவில் என்னோடு பல வருடங்களாக இணைந்து ஜெபிக்கும் ஒரு சகோதரியின் பெயர் ஜெபராணி வைலட் என்பதாகும். இவர்களுக்கு ஒரே ஒரு மகள். அவளுடைய பெயர் ஜாய். தாயின் பக்தி வழியில் மகளும் நடந்தபடியால், கர்த்தர் அந்த மகளுடைய வாழ்வை மிகவும் ஆசீர்வாதமானதாக மாற்றினார். அவள் Ph.D., பட்டம் பெற்றாள். ஏற்ற சமயம் தேவனுக்குப் பிரியமான மகன் ஒருவருக்கும் அவளுக்கும் கர்த்தரு டைய ஆசீர்வாதத்தினால் திருமணம் நடந்து, பிரேஸில் நாட்டுக்கு தனியே புருஷனோடு வாழ சென்றாள். ஏற்ற சமயத்தில் ஒரு அழகான பெண் குழந்தைக்குத் தாயாகும் பாக்கிய வாழ்வையும் பெற்றாள். ஆம், இதைத்தான் "கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்" என்று வேதம் அழகாகக் கூறுகிறது.

அன்பானவர்களே, மத்தேயு 6:33-ன்படி, கர்த்தரை நீங்களும் முழு மனதோடும், முழு இருதயத்தோடும் தேடுவீர்களானால், அவரால் உண்டாகிற ஆசீர்வாதத் தையும், புகழ்ச்சியையும் நிச்சயம் பெற்றுக்கொள்வீர்கள்.

**நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாகவும், பெருகுகிறவர்களாயுமிருங்கள்**
(2 கொரிந்தியர் 9:8)

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதனாகிய ஆபிரகாமின் வாழ்க்கையை பாருங்கள். அவன் கர்த்தரை அறியாதிருந்த வெறுமையான நிலைமையை அவர் முற்றிலுமாக மாற்றி, இயேசு கிறிஸ்து வரைக்கும் சந்ததி சந்ததியாக தேவனால் வரும் சம்பூரண ஆசீர்வாதத்தை அற்புதமான ரீதியில் பெற்று பெருக்கமடைந்தான் என்று வாசிக்கிறோம்.

ஆபிரகாம் எவ்வாறு இத்தகைய ஆசீர்வாதத்திற்கு பாத்திரவானாக மாறினான்?

ரோமர் 4:21-ன்படி, தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்ல வராயிருக்கிறாரென்று அவன் முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவன் ஆனான். அவன் குழந் தையற்ற நிலையில், கர்த்தர் தனக்கு அருளிய வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தான். அதைக் குறித்து அவிசு வாசமாய் சந்தேகப்படாமல், ரோமர் 4:18-ன்படி, "தான் அநேக ஜாதி களுக்கு தகப்பனாவதை நம்புகிற தற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்." அதுமட்டுமின்றி, தான் ஏறக்குறைய நூறு வயதா யிருக்கும்பொழுது, தன் சரீரம் செத்துப்போனதையும், அவன் மனைவி சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்து, தேவன் தனக்கு அருளிய வாக்குத்தத்தத்தைக் குறித்து கொஞ்சமும் சந்தேகப் படாமல், தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் உறுதிப்பட்டு, தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும் தெய்வீக பாக்கிய வாழ்வை பெற்றுக்கொண்டான்.

இன்றைக்கு கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பரிபூரண மாய் பெறமுடியாமல் பற்பல தேவைகளோடும், குறை வுகளோடும் எத்தனையோ பேர் கண்ணீரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், வேதம் என்ன சொல்லு கிறது?

**"கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது"** (சங்கீதம் 34:10)

**"கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான்"**
(நீதிமொழிகள் 28:25)

பிரியமானவர்களே, ஆபிரகாமைப் போல் கர்த்தருடைய வார்த்தையின்மேல், வாக்குத்தத்தத்தின்மேல் குறைவுகள், தேவைகள் மத்தியிலேயும் விசுவாசம் உள்ளவர்களாக நீங்களும் பயபக்தியைக் காண்பிப்பீர்களானால், ஆபிரகாம் பெற்றுக்கொண்டது போல நீங்களும் உங்களது வாழ்வில் சகல குறைவுகளும் மாறி, கர்த்தருடைய நிறைவான ஆசீர்வாதத்தை சம்பூரணமாய் பெற்று அனுபவிப்பீர்கள்.

**நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்த தேவன் உங்களை ஸ்திரப்படுத்தி பெலப்படுத்துவார்!**

“**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப் படுத்தி, நிலைநிறுத்துவாராக**” (1 பேதுரு 5:10)

அருமையானவர்களே! இவ்வுலக வாழ்வில் நம்முடைய அழைப்பு எவ்வளவு மேன்மையானது என்பதை நாம் ஒவ்வொருவரும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். அநேகர் ஒவ்வொருநாளும் உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமே நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்று எண்ணி, பக்திக்குரிய காரியங்களில் கொஞ்சமும் நாட்டம் கொள்ளாமல் லௌகீகக் காரியங்களையே முழுமனதுடன் நாடித் தேடி, முடிவில் நரகத்தின் பாதையிலேயே தங்கள் வாழ்வை முடிக்கின்றனர். இது எத்தனை பரிதாபத்துக்குரிய காரியம்!

> தெய்வ பயத்திற்கு முதலிடம் கொடுத்து, அவருடைய வழிகளில் நடப்பதில் ஜாக்கிரதையைக் காண்பிக்கிறவர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்கள்

ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சீஷன் யூதாசைப் பாருங்கள். அவன் இயேசுவோடு கூடவேயிருந்தபொழுதும்கூட, முடிவில் பண ஆசையினிமித்தம் ஆண்டவர் இயேசுவை பகைஞரிடம் காட்டிக்கொடுத்து, வயிறு வெடித்து, நான்றுகொண்டு சாகவேண்டிய பரிதாபமான முடிவைப் பெற்றான். அதினிமித்தம் இன்று பரலோகம் செல்லும் பாக்கியமான வாழ்வை அவன் இழந்து, நரகத்தில் “ஐயோ, நான் அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டேனே” என்று பிதற்றியவனாகக் கண்ணீர் விட்டு கதறிக்கொண்டிருக்கிறான்.

ஆனால், அவனோடு சேர்ந்த மற்ற பதினொரு சீஷர்களின் வாழ்வைப் பாருங்கள். அப்போஸ்தலர் 2-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடியே, கர்த்தர் அருளிய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிறைந்து, ஆண்டவர் இயேசுவின் வாழ்வைப் பின்பற்றி, அவர்களும் அவர் பெற்றிருந்த வல்லமையினாலும், மகிமையினாலும் நிறைந்தவர்களாக எழும்பிப் பிரகாசித்தார்கள். யோவான் 3-ஆம் அதிகாரத்திலே, பேதுருவும், யோவானும் தேவ வல்லமையினால் நிறைந்தவர்களாக, பிறவி சப்பாணியான ஒரு மனிதனுக்காக வல்லமையுடன் வேண்டுதல் செய்து, உடனடியாக விடுதலையை அவன் அற்புதமான விதத்திலே பெறச் செய்து, தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்று வாசிக்கிறோம்.

அதேவண்ணமாக, நாமும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிறைந்தவர்களாக கிறிஸ்துவுக்குள் எழும்பிப் பிரகாசிக்கும்பொழுது, கர்த்தருடைய மகிமை நம்மேல் உதிக்கும் (ஏசாயா 60:1,2). வேதம் சொல்லுகிறபடியே நாமும், “கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போன்று பிரகாசிப்போம்” (பிலிப்பியர் 2:14,15).

எனக்கு அருமையானவர்களே! நம் வாழ்வு கர்த்தருக்கு முன்பாக எப்படிப்பட்டதாயிருக்கிறது என்று ஆராய்ந்து பாருங்கள். நம் முடைய குறைவுகளையெல்லாம் பயபக்தியோடு தேவ சமுகத்தில் அறிக்கையிடுவோம்.

“**பூமியிலுள்ளவைகள் அல்ல; மேலானவைகளையே நாடுங்கள்**”

(கொலோசெயர் 3:2).

என்ற வேத வாக்கின்படியேயும், கொலோசெயர் 3:1-ன்படியேயும், “...கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவை களைத் தேடுங்கள்” என்ற தெய்வீக வாக்கின்படியேயும், தேவாதி தேவனால் அவருக்குள் ஸ்திரப்படுத்தப்பட்ட வர்களாகவும், பெலப்படுத்தப்பட்டவர்களாகவும் நித்திய மகிமைக்கென்று தெய்வ பயத்துடனும் நடந்து கர்த்தரு டைய சித்தத்தை முடிவுபரியந்தம் நிறைவேற்றி முடிப்போம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் எல்லோருக்கும் முன்மாதிரியாயிருக்கும்படிக்கு தேவனு டைய சித்தத்தை முடிவுபரியந்தம் முடித்து, இன்றைக்கு தேவனுடைய வலது பாரிசத்தில் கெம்பீரமாக வீற்றிருக்கிறார். அதுபோன்றே, பவுல் அப்போஸ்தலன் கூறுகிறபடி, நாமும் கர்த்தருக்கென்று நல்ல போராட் டத்தைப் போராடி, விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, நம் ஓட்டத்தை முடித்து, கர்த்தர் அருளும் “நீதியின் கிரீடத்தை” பெற்றுக்கொள்வோம் (2 தீமோத்தேயு 4:7,8).

# இன்றைய இறை

## தியானம்

## மே - 2025



1 மல்கியா 3:10 - இடங்கொள்ளாமற்போகுமட்டும் ஆசீர்வாதம்
**தியானத்திற்கு:** ஆதியாகமம் 26:12,13; ரூத் 2:12; லூக்கா 5:1-7

2 2 கொரிந்தியர் 12:9 - தேவ கிருபை நமக்கு போதும்
**தியானத்திற்கு:** யாத். 33:19; எண். 6:25; ஏசாயா 54:10; புல. 3:32

3 சங்கீதம் 145:19 - கூப்பிடுதலைக் கேட்கிற கர்த்தர்
**தியானத்திற்கு:** 2 நாளா. 13:14-16; சங். 145:18; மத். 20:29-34; லூக்கா 18:7,8

4 ஏசாயா 58:9 - இருக்கிறவராக இருக்கிறவர்
**தியானத்திற்கு:** யாத். 3:14; சங். 102:27; மல்கியா 3:6; எபி. 13:8

5 1 தீமோத்தேயு 6:17 - சம்பூரணமாய் கொடுக்கிற தேவன்
**தியானத்திற்கு:** யோவேல் 2:26; ரோமர் 15:29; 2 கொரி. 9:8; யாக்.1:5

6 ஏசாயா 62:12 - நீங்கள் கைவிடப்படாதவர்கள்
**தியானத்திற்கு:** ஆதி. 28:15; லேவி. 26:44; ஏசாயா 62:4; 2 கொரி. 4:8,9

7 உபாகமம் 33:12 - கர்த்தருக்குப் பிரியமானவன்
**தியானத்திற்கு:** நீதி. 11:20; ஏசாயா 48:14; 2 கொரி. 5:9; எபி. 11:5

8 எசேக்கியேல் 37:27 - கர்த்தருடைய வாசஸ்தலம்
**தியானத்திற்கு:** யாத். 40:28-34; லேவி. 26:11; சங். 132:13,14; வெளி 21:3

9 சங்கீதம் 149:4 - சாந்தகுணம்
**தியானத்திற்கு:** எண். 12:3; கொலோ. 3:12,13; 1 தெச. 5:14; 2 தீமோ. 2:24

10 மத்தேயு 16:19 - திறவுகோல்
**தியானத்திற்கு:** ஏசாயா 22:22; வெளிப்படுத்தல் 3:7

11 சங்கீதம் 60:12 - சத்துருக்களுக்கு விலக்கி காக்கிற தேவன்
**தியானத்திற்கு:** உபா. 25:19; 2 சாமு. 22:49; சங். 106:10; மீகா 4:10

12 உபாகமம் 28:5 - எல்லாவற்றிலும் ஆசீர்வாதம்
**தியானத்திற்கு:** ஆதி. 22:15-18; சங். 115:12,13; கலா. 3:8,9; எபி. 6:13,14

13 ஏசாயா 43:2 - கர்த்தர் உங்களோடு இருப்பார்
**தியானத்திற்கு:** ஆதி. 26:3; யோசுவா 1:5; நியா. 6:12,16; ஏசாயா 43:5

14 நீதிமொழிகள் 11:18 - நீதி செய்யுங்கள்
**தியானத்திற்கு:** சங். 82:3; ஏசாயா 56:1; எசே. 45:9; கொலோ. 4:1

15 1 பேதுரு 5:6 - கர்த்தர் உங்களை உயர்த்துவார்
**தியானத்திற்கு:** உபா. 28:14; சங். 37:34; மத். 23:12; யாக். 4:10

16 1 சாமுவேல் 2:9 - பரிசுத்தவான்கள் காக்கப்படுவார்கள்
**தியானத்திற்கு:** சங்கீதம் 37:28; நீதி. 2:8; 1 தெச. 5:23

17 1 யோவான் 4:9 - நீங்கள் பிழைப்பீர்கள்
**தியானத்திற்கு:** ஓசியா 6:2; யோவான் 14:19; 2 கொரி. 13:4; கலா. 2:20

18 செப்பனியா 3:17 - தேவன் நம் நடுவில் இருக்கிறார்
**தியானத்திற்கு:** சங். 46:5; உன். 1:13; ஏசாயா 12:6; யோவேல் 2:27

19 சங்கீதம் 19:11 - மிகுந்த பலன்
**தியானத்திற்கு:** லேவி. 19:25; 2 நாளா. 15:7; ஏசாயா 61:7; மத். 5:12

20 சங்கீதம் 34:8 - கர்த்தர் நல்லவர்
**தியானத்திற்கு:** 2 நாளா. 5:13; சங். 100:5; எரே. 33:11; புல. 3:25

21 மத்தேயு 6:33 - தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்
**தியானத்திற்கு:** 1 நாளா. 16:11; ஏசாயா 55:6; ஆமோஸ் 5:4; லூக்கா 12:31

22 சங்கீதம் 84:11 - உத்தமமாய் நடவுங்கள்
**தியானத்திற்கு:** உபாகமம் 18:13; 2 இராஜா. 20:1-6; நீதிமொழிகள் 2:7

23 யோவான் 14:6 - கிறிஸ்து நமக்கு ஜீவன்
**தியானத்திற்கு:** யோவான் 11:25; ரோமர் 5:17; 2 கொரி. 4:10; 1 யோவான் 5:11,12

24 எரேமியா 29:12 - செவிக்கொடுக்கிற தேவன்
**தியானத்திற்கு:** நியா. 13:9; 2 நாளா. 13:14-16; சங்கீதம் 3:4; 18:6

25 யோவான் 10:10 - பரிபூரணம்
**தியானத்திற்கு:** உபா. 28:11; நீதி. 28:20; மத். 13:12; பிலி. 4:18,19

26 சங்கீதம் 50:15 - கர்த்தர் நம்மை விடுவிக்கிறவர்
**தியானத்திற்கு:** யாத். 6:6,7; 2 சாமு. 22:18-20; எரே. 15:20,21; அப். 7:9,10

27 யோவான் 14:27 - கர்த்தர் சமாதானம் தருவார்
**தியானத்திற்கு:** லேவி. 26:3-6; சங். 29:11; மாற்கு 5:25-34; 2 தெச. 3:16

28 நெகேமியா 8:10 - கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருங்கள்
**தியானத்திற்கு:** நெகே. 12:43; சங். 30:11; ஏசாயா 35:10; ஆபகூக் 3:18

29 யாக்கோபு 4:8 - தேவனிடத்தில் சேருங்கள்
**தியானத்திற்கு:** ஏசாயா 58:2; எபே. 3:12; எபி. 7:19; 11:6

30 ஏசாயா 65:22 - கைகளின் கிரியைகளை அனுபவிப்பீர்கள்
**தியானத்திற்கு:** உபா. 28:12; 30:9; யோபு 1:10; சங்கீதம் 128:2

31 ரோமர் 6:14 - பாவம் உங்களை மேற்கொள்ளாது
**தியானத்திற்கு:** ஆதியாகமம் 39:9; ரோமர் 6:7; எபிரெயர் 12:1




இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org

SEESHA

# தகுந்த கல்வி மூலம் பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்குவோம்









கல்வி என்பது தனிநபர்களின் மற்றும் நம் நாட்டின் நிலைத்த வளர்ச்சிக்கான அடிப்படை தூணாகும். தகுந்த கல்வியில் முதலீடு செய்வது என்பது, வறுமை குறைப்பு மற்றும் சமூக வேற்றுமையை குறைக்கும் முக்கியமான வழியாகும் என்பதை உணர்ந்து, SEESHA அமைப்பு 34 சமூகங்களில் இயங்கி வரும் அதன் கல்வி மையங்கள் மூலம், பாதுகாப்பற்ற நகர்ப்புற குடிசைகள், கிராமப்புறங்கள் மற்றும் பழங்குடி பகுதிகளில் வசிக்கும் 2090-க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு மாற்றம் தரும் கல்வி கற்கும் சூழலை வழங்கி வருகிறது.

## இந்தியா முழுவதும் செயல்படும் சீஷா கல்வி மையங்களின் சிறப்பம்சங்கள்:

- முதல் தலைமுறை மாணவர்கள் வளம் பெற, அவர்களுடைய குறைந்த கல்வி வாய்ப்புகளை கடப்பதற்கு உதவுவது முக்கிய நோக்கமாகும்.
- அனைத்து மாணவர்களுக்கும் இலவச, தரமான பயிற்சியை வழங்குவதோடு மட்டுமல்லாமல், உயர் வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், வணிகம், அறிவியல் போன்ற முக்கிய பாடங்களில் தீவிர பயிற்சியையும் வழங்குகிறது.
- பிள்ளைகள் முழுமையாக கல்வி கற்க, பாதுகாப்பான இடத்தை வழங்கி, அவர்களை சமூக விரோத செயல்களில் இருந்து விலக்குகிறது.
- அடிக்கடி நடைபெறும் சுகாதார பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள், நல்ல உடல்நல வாழ்வை வளர்க்கின்றன.
- கோடை மாணவர் பயிற்சி முகாம்கள் மற்றும் முக்கிய தினங்களை அனுசரித்தல், அவர்களுடைய கல்வி பயிலும் அனுபவங்களை வளப்படுத்துகின்றன.



## சீஷா ஸ்கூல் கிட்:
### எழும்பிப் பிரகாசிக்க ஒரு வாய்ப்பை வழங்குதல்!

நலிவுற்ற பிள்ளைகள் தங்கள் பள்ளி ஆண்டை நம்பிக்கையுடன் தொடங்க உதவுவதற்காக, சீஷா ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு ஸ்கூல் கிட் வழங்கி வருகிறது. ஸ்கூல் கிட் ஒவ்வொன்றிலும் அத்தியாவசிய எழுதுபொருட்கள் கொண்ட ஒரு புத்தகப் பை உள்ளது. இது அவர்களின் கல்வி இலக்குகளை மகிழ்ச்சியுடன் தொடர உதவுகிறது.

### சீஷா மூலம் கல்வி கற்க ஆதரவு!

என் பள்ளி கல்வியை தொடருவது எப்போதும் ஒரு சிரமமாகவே இருந்தது. ஏனெனில், நான் வருமானம் குறைந்த ஒரு குடும்பத்தை சேர்ந்தவன். ஆனால் SEESHA அமைப்பின் இலவச துணைப்பாட வகுப்புகளும், ஆண்டுதோறும் தரப்படும் புத்தகப் பை மற்றும் எழுது பொருட்களும் என் வாழ்க்கையில் உண்மையான ஆசீர்வாதமாக இருக்கிறது. இப்போது வகுப்பில் நான் முழுமையாக பங்கேற்க முடிகிறது; தனிமைப்படுத்தப்பட்ட எந்த உணர்வும் இல்லை. SEESHA அளிக்கும் புத்தகப் பையை பயன்படுத்தி, என் கல்வி கனவுகளை சுமப்பது எளிதாகியுள்ளது.

– N. ஜோசுவா, 6-ஆம் வகுப்பு, டி.ஜே.ஹள்ளி, பெங்களூரு.



இந்த ஆண்டும் பாதுகாப்பற்ற சமூகங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஸ்கூல் கிட் வழங்க திட்டமிட்டுள்ளோம். அவர்கள் கற்பதற்கும் முன்னேற்றம் அடைவதற்கும் தேவையான உபகரணங்களை வழங்கும் இந்த முயற்சியில் நீங்களும் இணையலாம்! கீழ்க்காணும் வழிகளில் அவர்களுக்கு ஆதரவு வழங்கலாம்.

- 4 மாணவர்களுக்கு ஸ்கூல் கிட் வழங்க: ரூ.2,000/-
- 20 மாணவர்களுக்கு ஸ்கூல் கிட் வழங்க: ரூ.10,000/-

* நீங்கள் விரும்பும் எண்ணிக்கையில் ஸ்கூல் கிட் வழங்கலாம்.

DONATE TO SEESHA

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

UPI ID : 9384015155@okbizaxis

UPI: G Pay, PhonePe, Paytm, UPI, pay
Wallets: OLA MONEY, freecharge, MobiKwik, JioMoney

You can also donate through www.cashfree.com/payme/seesha

044 66660000
+91 9300 600 600

www.seesha.org
info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045




Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

Karunya
ARISE AND SHINE
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

Accreditation

A++ NAAC A++ Grade | ACCA B. Com and Management Programs | NBA National Board of Accreditation Engineering and Management Programs | ICAR B.Sc. (Hons.) Agriculture Program

Global Ranking

THE World University Rankings 2025 1201-1500 Band

CATEGORY 1 Institution UGC GoI.

# ADMISSIONS Open 2025



## Learn At KARUNYA Lead the WORLD...

**38 YEARS and COUNTING....**

GET UPTO 100% SCHOLARSHIP*

SPECIAL JEE & Inventors Scholarship

## School of Engineering and Technology, CST



- 12 Exclusive AI Programs and 60+ AI-Integrated Courses shaping future-ready professionals
- Strong collaborations with tech giants: Microsoft, Intel, Dell, CISCO, IBM, NVIDIA, Siemens & others
- Centres of Excellence in Cloud Computing, Data Science, Deep Learning, IoT, UAVs, and more
- AI Skilling Labs by Intel & Dell and Central Labs for AI, Data Science, Software, and Nanotech
- ₹4 Cr MOFPI-funded Pilot Plant, NABL Accredited Lab, Animal House, and Product Development Labs
- IIT Delhi Co-Innovation Centre driving research in Robotics, AI, Automation & Bionic Hand Innovation

## Karunya School of Management




### Specializations

- Business Analytics
- Human Resources
- International Business
- Finance
- Marketing
- Entrepreneurship
- Supply Chain & Logistics Management

## School of Science, Arts & Media

- Forensic Science
- Information Security and Digital Forensics
- Computer Science and Media Production
- Artificial Intelligence and Data Science
- **PG Diploma** in Medical and Analytical Laboratory Technology

**B.Com** (Specialisation in Professional Accounting and Financial Technology)

## School of Agricultural Sciences



Accredited by ICAR

### Facilities / Highlights

- 329 acres of Instructional & Research farm
- Rose Garden with 60 varieties, Medicinal Garden with more than 100 plant species, Butterfly Garden & ornamental cafeteria
- Orchard with 23 Fruit crops and Nursery Crop cafeteria with important varieties
- Hi tech farming with 1000m2 Polyhouse, Shade net, Mist chamber
- Eleven Well Equipped and Spacious Laboratories
- 13 Entrepreneurship Modules
- Spacious classrooms with Smartboard or LCD facilities
- B-Class Agromet Observatory & Automatic weather station

### WHY CHOOSE KARUNYA?

- Work with **MNC'S & Earn While Studying**
- **100% Placement** Opportunities
- Opportunity to learn from professors listed among the **World's Top 2% Scientists**
- International Internships in over **85+ Countries**
- Industry **5.0 Curriculum**

**Programs Offered at KARUNYA**

ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE
COMMERCE | FORENSIC SCIENCE | DIGITAL FORENSICS | PHYSICAL SCIENCES
MEDIA | ONLINE MBA

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888**

For more details contact:
94425 03407
94425 03422

*Conditions apply

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16:20)

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# காக்கிநாடா, சமாதான பிரார்த்தனை திருவிழா

நடத்துபவர்கள்: LUKE MEMORIAL'S PEACE TEMPLE



2025 மே
**9–11**
மாலை 6 மணிக்கு

தேவ செய்தியும் ஜெபமும்:
***Dr.* பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர்**

**VENUE: MC LAURIN HIGH SCHOOL GROUND**
**KAKINADA, ANDHRA PRADESH**

குடும்பமாகவும், நண்பர்களுடனும் வாருங்கள்; ஆசீர்வாதம் பெறுங்கள்.

6381754573

## ஈஸ்டர் கூடுகை, ஹைதராபாத் - அறிக்கை

ஹைதராபாத், ராம்கோட்டில் உள்ள CSI நூற்றாண்டு வெஸ்லி தேவாலயத்தில், ஈஸ்டர் பண்டிகை மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் கொண்டாடப்பட்டது. Dr. பால் தினகரன், சகோதரி இவாஞ்சலின் அவர்களுடன் இணைந்து, யோவான் 11:25 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 1:18-லிருந்து பிரசங்கித்து, என்றென்றும் ஆளுகை செய்யும் இயேசுவை உயிர்த்தெழுந்த ஆண்டவராக அறிவித்தார். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், பரிசுத்த ஆவியின் நிறைவினால் ஏறெடுத்த ஜெபத்தில், ஜனங்கள் சுகத்தையும், குடும்பங்களில் ஒருமனப்பாட்டையும் பெற, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அவர்களுக்குள் அனுப்பினார். கூட்டத்தில் கலந்துகொண்டோர், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையோடும், வெற்றியுள்ள விசுவாசத்தோடும் நிரப்பப்பட்டு, ஜீவனுள்ள கிறிஸ்துவில் அகமகிழ்ந்தனர்.






